உ

குமரன்றுணை.

நாற்பத்தெண் பேயர்களில்

மகா மகத்துவம் பொருந்திய

இராமதேவர் அருளிச்செய்த

# சிவயோகம் உலா.

இஃது

மதுரை வித்துவான்

த. குப்புசாமிநாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக்கோனார்

அவர்களாற் றமது

மதுரை வடக்குமாசிவீதி,

ஸ்ரீ ராமச்சந்திரவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை] 1915. [அணா 5

S 304

S.304

உ

கடவுள் துணை.

மகா மகத்துவம் பொருந்திய

# இராமதேவர் திருவாய்மலர்ந்தருளிய

# சிவயோகம் ௨௱.

குரு வணக்கம்.

மூலமெனு முதற்பொருளா முத்திநடு வணையில்
மூதண்ட மானதொரு பிரம்மத்துக் கப்பால்
ஞாலமெனுந் தவமுடைய சத்திபதி மேலே
நாதாந்தப் பெருவெளியி னடுவெளியின் கீழே
நீலமிகு நெருப்பாறு மயிர்ப்பாலத் தப்பால்
நிறைந்தபரி பூரணமாய் நிஷ்களம தாகிச்
சீலமிகுந் தவமுடையோ ரிருதயமே தானாய்ச்
சிறந்துநின்ற பரமகுரு சீர்பாதந் துணையே. (1)

வாசிமார்க்க நிலை.

பாதமெனும் வாசிதனை யறியவேண்டி
பத்தியுடன் மனோன்மணியைக் கண்டுபோற்றி
வேதமெனும் பொருளறிய வேண்டுமென்று
வேண்டினே னாதாந்த வேதத்தாயும்
நீதமுடன் வாராம தேவாவென்று
நிலைநிறுத்தி மதியமுர்தம் நினைவாயீந்தாள்
போதமிகு மதியமுர்தங் கொண்டபோது
புத்தியுடன் பூசைவிதி புகலென்றேனே. (2)

புகலென்ற போதில்மனோன் மணிதான்விந்து
பூரணமாய் மதியமுர்தம் புகட்டினாள்காண்
அகமென்ற வகமதவு முத்தியாச்சு
வம்பரத்தின் றரிசனமு மடுக்கலாச்சு
செகமென்ற சிவமயமுந் தெளியலாச்சு
தேவாதி தேவனென்ற பேருமாச்சு
சுகமென்ற பூசைவிதி தன்னாலந்தச்
சுத்தமுள்ள சத்தியைநான் றொழுதேன்பாரே. (3)

தொழுதமுறை யென்னவென்றாற் சத்திபூசைச்
சுருக்கமுடன் சொல்லுகிறே னன்றாய்க்கேளு
பழுதொன்று மில்லாத அகாரதிட்சைப்
பத்திகொண்டு மண்டலமே செபித்தாயாகில்
அழுத்தமென்ற தேகமது சித்தியாச்சு
அரகரா வாக்கையதற் கழிவோயில்லை
நெழுத்தமுள்ள சத்தியென்ற தேகந்தானும்
நிலைத்தபின்பு உயிர்சிவத்துக் குறுதிகேளே. (4)

உறுதியென்ற சத்தியடா உகாரதீட்சை
உள்ளுணர்ந்து மண்டலமே செபித்தாயாகிற்
மறுதியென்ற வாசியதுக் குறுதியாச்சு
பாலகனே வாசியென்று லுயிர்தானப்பா
கருதுகின்ற வுடலுயிர்தா னிலைத்துதானால்
காரணமாய்ச் சித்துவெகு வாடலாகும்
சுருதிபொரு ளானதொரு குருவைக்காணச்
சொல்லுகிறோம் பூசைவிதி நன்றாய்க்காணே. (5)

காணுதற்கு மனமென்ற மகாரபீடங்
கருணையுள்ள வட்டமடா விந்துவிந்து
ஊனுதற்கு மகாரமென்ற விந்துதன்னை
உற்றப்பா ரோங்காரக் கம்பமாகிப்
பேணுதற்குக் கம்பநுனி மேலேயையா
பேரண்ட மானதொரு வன்னிவன்னி
தோணுதற்கு வன்னியென்று லாயிரத்தெண்மலர்க்குள்
தொடுகுறிபோ லமூர்தமதற் குள்ளேபாரே. (6)

உள்ளான மதியமூர்தந் தன்னைமைந்தா
ஒருபோது பணவிடைதா னுள்ளேகொண்டால்
விள்ளான தேகமதற் கழிவோயில்லை
வினையான முத்தேக முத்தியாச்சு
கொள்ளாவ்ல மந்திரமுஞ் சித்தியாச்சு
குருசுருதி முடிவுபொருள் காணலாச்சு
தள்ளாத வஷ்டகர்மச் சித்தியாச்சு
தாயான சத்தியுட பூசைகேளே. (7)

---

வாசி மார்க்கம் வகையுடன் அறிய விரும்பின் திருமூலர்ஞானம் எண்பத்து நான்கில் தெளிவாய்க் கூறியிருக்கிறது. வாங்கிப்பாருங்கள்

### பூசைவிதி சக்கரம்.

கேளப்பா பூசைவிதிச் சக்ரஞ்சொல்வேன்
கிருபையுள்ள சக்கரந்தான் விந்துவிந்து
ஆளப்பா விந்துவென்ற வளையத்துள்ளே
அருள்பெருகு மோங்கார வதனுட்போடு
நாளப்பா ஓங்கார மதனுட்டானம்
நடுவான சுழியதனை அதனுட்போடு
தேளப்பா கொட்டுதல்போற் சக்கரமுமாச்சுச்
சிவாயகுரு சக்கரத்துக் கின்னங்கேளே. (8)

இன்னங்கேள் விந்துவென்ற வளையத்தின்மே
விரவிமதி சுழினையென்ற வளையம்போடு
வன்னமென்ற முதல்வளைய மிதழ்தானெட்டு
மறுவளையம் பதினாறு மதின்மேலப்பா
சொன்னதொரு முப்பத்தி ரண்டுபோடு
துருவமுள்ள விதழன்பத் தாறுமாச்சு
வின்னமில்லாக் கோட்டைநால் வாசலிட்டு
விலாசமுள்ள தேவதையை விள்ளக்கேளே. (9)

### பூசைசெய்யு மார்க்கம்.

கேளப்பா மேல்வாசல் பிர்மபீசங்
கெணிதமுள்ள கீழ்வாசல் மாலின்பீசம்
வாளப்பா வடவாசல் ருத்திரபீசம்
வளமான தென்வாசல் மயேசன்பீசம்
வேளப்பா சதாசிவன்போ விருந்துகொண்டு
மேற்றிசையை நோக்கிச்சக் கரத்தைவைத்து
நாளப்பா தினம்பார்த்துப் பூசைசெய்ய
நல்லநாள் நினைத்தநாள் நன்னுமையாமே. (10)

நன்மையுடன் பூசைசெய்ய மைந்தாகேளு
நலமாகச் சுகாசனமா யிருந்துகொண்டு
உண்மையுடன் விபூதியையுந் தளமாய்ப்பூசி
உரிமையுள்ள மேருவைமுன் னிறுத்திக்கொண்டு
தன்மையுடன் பலகாரம் ரசவர்க்கங்கள்
சந்தனதாம் பூலமுடன் தயவாய்வைத்து
செம்மையுடன் தானிருந்து தியானம்பண்ணிச்
சிவமான பாத்திறங்கை தன்னில்வேண்டே. (11)

---

பூசாவிதி முதலிய விபரங்களைப் பூர்த்தியாய்ப் பார்க்கவேண்டு மானால் ஸ்ரீ தெட்சணாமூர்த்தி பூஜாவிதி பத்தில் பார்க்கவும்.

வேண்டியதோர் பாத்திரங்க ளனந்தமுண்டு
விசையொடுக்கும் பாத்திரந்தா னார்தான்காண்பார்
ஆண்டவனு ரமுதெடுத்து வுண்டாரையா
அதின்பிறகு சத்திமதி யமுர்தமுண்டாள்
தாண்டவத்திற் றில்லைநட மாடும்போது
சங்கரனுர் நஞ்சமுகந் தானேகொண்டாற்
காண்டமென்ற கவண்டலந்தான் கபாலபீடங்
கயிலாச மேருவென்ற பீடந்தானே. (12)

தானென்றபீடமென்றுங் கபாலமென்றுஞ்
சங்கையுள்ள சத்தியென்றும் பாத்திரமென்றும்
மானென்ற மந்திரத்தின் பீடமென்றும்
மகாசுத்தி யானபாத்தி ரந்தானென்றும்
தேனென்ற பாத்திரத்தின் பெருமைசொல்லச்
சிவனுலு முடியாது தேவிசுத்தி
கோனென்ற குருவருளால் சொல்லக்கேளு
கொடிமுடியாந் தங்கமென்ற பாத்ரந்தானே. (13)

பாத்திரத்தைத் தானறிந்து பத்தியாகப்
பத்திகொண்டு யிடக்கரத்தில் வலக்கரத்தாற்பற்றி
நேத்திரத்தின் பாகமதாய்க் கடத்தைவாங்கி
நேர்மையுடன் மூன்றுலங்கி யம்மதுவைப்பூரிக்
கோத்திரத்தின் குருவருளால் சிவ்வெனவேவாங்கிக்
குருவான பதிநோக்கி அம்மெனவேபூசி
மாத்திரைதான் மயங்காமல் ரேசகபூரகமாய்
மனதறிவாற் கும்பகத்தில் வாசிதனைப்பூட்டே. (14)

வாசிதனைப் பூட்டிமாத் திரையொன்றதின்மேல்
மார்க்கமுடன் கறிவர்க்க வகையருந்தி
நேசமுடன் றூபமேற் றீபம்வைத்து
நினைவாய்த்தூ பஞ்சாத்தி னுட்செலுத்திப்
பாசமுடன் பதியறிந்தப் பதியில்நின்றுற்
பரமகுரு தீபவொளி பளீரெனவேதோன்றும்
நாசிமுனை மீதில்குரு நாதனடிவாழும்
நாதாந்தப் பேரொளியி னன்மைபோலாமே. (15)

☞ கணநாதர் ஞானேபதேசம் பதினாறில், சுழி முனையின் சூட்சங்களைச் சுருக்கமாய்ச் சொல்லியிருக்கிறது. கண்டு அறியவும்.

ஆமப்பா சிவாயகுரு சக்கரத்தைமைந்தா
ஆருக்குஞ்சொல்லாதே யையாவையா
வாமப்பால் மதியமுர்த மறிந்தோர்க்கீவாய்
மதியறியார்க் கீந்ததினுல் வளமாங்கேது
தாமப்பா தன்னுடலைத் தானேகண்டு
தன்மையுடன் சிவாயகுரு சக்கரத்தைவைத்து
நாமப்பா மொழியதனை நிறுத்திப்பூசை
நன்முகப் பூசிக்க நன்மைபெறலாமே. (16)

பூசையில்கூடும் பேயர்கள்.

நன்மையுள்ள பூசையிலே மைந்தாமைந்தா
நானீயு மல்லாது வேறேவேண்டாம்
உண்மையுள்ள பெரியோர்கள் வந்தாற்சேரு
வுலகமதிற் பலகூட்ட மாகாவாகா
தன்மையுள்ள சற்குருவின் பாதந்தன்னைத்
தாரணியி லறியாதார் கோடாகோடி
வண்மைபெறச் சாஸ்திரத்தைப் பாடம்பண்ணி
வசனிப்பார் தெரிந்தவர்போல் மைந்தாபாரே, (17)

பாரப்பா பயனறியார் கோடாகோடிப்
பலநூலும் பார்த்துமதி யறியார்கோடி
நேரப்பா நிலையறிந்து நில்லார்கோடி
நிட்ரே மானமன முடையோர்கோடி
வீரப்பா கொண்டுமன தறியார்கோடி
வேசையின்மே லாசைகொண்ட வீணர்கோடி
காரப்பர் லகிரிகொண்டு லகிரிதனையறியார்
காசினியில் மெத்தவுண்டு கண்டுதேறே. (18)

தேருத சித்தரிடம் பேசவேண்டாம்
ஜெபதபங்க ளறியாரைச் சேர்க்கவேண்டாம்
கூருத சொற்களைத்தான் கூவிக்கூவிக்
குணமறியான் மணமறியான் குருட்டுமாடு
பேராசை தான்பிடித்துப் பேய்போலோடிப்
பேய்க்கூற்ருய்த் திரிவாரை யடுக்கவேண்டாம்
ஆருன தில்லறமே சத்தியென்று
அமர்ந்திருப்பான் கோடியினி லொருவன்முனே. (19)

---

☞ சுப்பிரமணியர் ஞானம் இருபத்தைந்தில், மேலான திரிமூர்த்திகளின் செயலை இன்னதென நன்கு விளக்கிக்காட்டியிருக்கிறது

ஒருவனடா கோடியிலே ஒருவனுண்டு
உலகத்தோ டொற்றுமன தறிவாய்நிற்பான
சிறுவனடா வறுமையிலே சென்றேநிற்பான்
சித்துமிகுத் துடையவன்றா னவனேயாகுங்
குருமொழியை மறவாதான் குருவேயாகுங்
குண்டலியி னந்தியொலி கூறுவான்பாற்
றிருவிருந்தப்பதியறிந்து வாலைபூசை
செவ்வையாய்ச் செய்தவனே சித்தனாமே. (20)

மானதவாலைபூசை.

சித்தமென்ற பெரியோர்கள் பூசைமார்க்கம்
செப்பினர் வெகுசோலி யாகமைந்தா
பத்திகொண்டு பூசைவிதி நன்றாய்ச்சொன்னேன்
பக்குவத்தைச் சித்தர்கள்தா னறிந்துகொண்டு
சுத்தமுடன் சூட்சமதாய் வாலைபூசைச்
சொன்னவன்றான் றேவனடா வென்றுபேசிப்
புத்தியுடன் கண்டவர்தா னடக்கம்பண்ணிப்
பூரணமாங் குகைதனிலே வைத்திட்டாரே. (21)

வைத்திட்ட விதங்கண்டு நான்தான்சென்று
மலைதோறுஞ் சித்தரிடங் கண்டுபேசிக்
கைத்திட்ட மானதொரு வாலைபூசைக்
கருவான நூல்வாங்கி நல்லோர்க்கீய்ந்தேன்
பொய்த்திட்ட மனதோர்க்கு யிந்நூல்கிட்டிப்
பூரணமாய் நன்மனதாய் நிற்பானப்பா
மெய்த்திட்ட மானதொரு ராமவாக்யம்
மேலான வாக்யமென்று பணிந்திட்டாரே. (22)

பணிந்திட்ட மானதமா வாலைபூசைப்
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்புள்ளோர்க்குக்
கணிந்திட்ட மனதான கனிவால்மைந்தா
கருணையுள்ள பூரணத்தைக் கருத்திலேந்தி
அணிந்திட்ட ரேசகத்தால் கும்பகத்தைப்பற்றி
அப்பனே பூரணத்தைப் பூரிப்பூரி
தணிந்திட்ட மூலமதில் வாசிகொண்டு
தானிருந்தித் தீபவொளி தான்தானுமே. (23)

---

☞ தெட்சணாமூர்த்தி ஞானச்சுருக்கம் ஐந்தில், வாலை பூஜா விதியையும் அதன் சித்தியையும் தெளிவறக் கூறியிருக்கிறது.

ஆமப்பா மானதமாம் பூசைதன்னை
ஆர்செய்வார் சித்தாதி சித்தன்செய்வான்
காமப்பால் மதமீறு மெசமுற்றக்
கன்மிகள்தான் செய்தாக்கா லழிந்துபோவான்
வாமப்பால் வாமத்தை மகிழார்தன்னை
மகத்தான் குருவென்றே மகிழ்ந்துநில்லு
தாமப்பா தன்தேகஞ் சுத்திபண்ணிச்
சதாசிவன்மேல் சிந்தையதாய்த் தானேநில்லே. (24)

நில்லென்ற லகிரியிலே யனந்தமுண்டு
நேர்மையுள்ள லகிரியடா நாதம்நாதம்
சொல்லென்றால் வெளிதோன்றச் சொல்லலாகா
சொல்லற்ற மவுனமதா யிருக்கவேண்டும்
வில்லென்ற விசையுடைய மனத்தோர்க்கையா
விளம்புகிறேன் ரகசியமாய் விளம்புறேன்யான்
கள்ளென்ற லகிரியொன்று கஞ்சாவொன்று
கனமான மந்திரமாஞ் சரக்கதொன்றே. (25)

ஒன்றான பூரணமா மாதிவஸ்து
ஓகோகோ விதுகாலும் பிர்மகற்பம்
நன்றாக நாலினுட விபரங்கேளு
நலமான வாரணிக்கிப் பெரிதிம்மூலி
நின்றாடு மூலிகைக்குப் பெரிதாம்மந்திரம்
நேர்மையுள்ள மந்திரத்துக் கதிகங்கேளு
குன்றாத பூரணமா மாதியாதி
குருவான வாதிவாதிவஸ்துக் கதிகங்காணே. (26)

காணாத பூரணமாம் வஸ்துதன்னைக்
காசினியி லாரறியப் போறாரையா
பேணும லுலகத்தோர் மாண்டுபோனார்
பிலமான வஸ்துவடா யேகவிந்து
தோணாத சத்தமடா தொனிக்கும்வஸ்து
துருவமுள்ள மேருவடா வண்டவஸ்து
பூணாத பொருளுடைய பூரணமாம்வஸ்து
பூரணமாய் நின்றிலங்கும் பூரணமதாமே. (27)

---

☞ சுப்பிரமணியர் சுத்த ஞானம் எட்டில், பூரண குண்டலி சத்தியின் சித்தி முதலிய விபரங்களைத் தெளிவாய்த் தெரியலாம்.

வாரணி குணம்.

தாமப்பா தாயினுட பருவஞ்சொன்னேன்
தன்மையுடன் பூசிக்கக் காலஞ்சேளு
நாமப்பா சொல்லுகிறேறு முதயகாலம்
நன்ருக வாரணியை யிறக்கிமைந்தா
வாமப்பால் மதியான வமுர்தமென்று
வணக்கமுடன் பாலதனை கையிற்கொண்டு
காமப்பால் தனக்குமொரு சுத்திகேளு
கனிவான முப்பழமு மிதற்காம்பாரே. (28)

பாரப்பா பழமறிந்துப் பாலைக்கொள்ள
பருவமுள்ள வாலைத்தாய் பாதங்காணும்
நேரப்பா நின்றவளு மகனேயென்று
நினைவாகச் சரிதைவழி நன்றாய்ச்சொல்லி
காரப்பா சரிதைவழி நன்றாய்க்கார்த்தால்
கனமான சாலோக பதவிகாணும்
ஆரப்பா வறிவார்கள் சாலோகபதவி
யரகரா வப்பதவி முத்தியாமே. (29)

முத்தியுள்ள வாரணியின் குணத்தைச்சொன்னேன்
மூர்க்கமுடன் பூசிக்கக் காலஞ்சொன்னேன்
சித்திபெற மூலியொடு தியானஞ்சொன்னேன்
சிவசிவா முப்பதவித் திறமுஞ்சொன்னேன்
புத்தியுள்ள நாதாக்கள் மறைப்புஞ்சொன்னேன்
பூரணமாய் நின்றிலங்கும் வாசிசொன்னேன்
பத்திகொண்டு நின்றவர்க்குப் பலிக்குஞ்சித்தி
பலியாது நினைவறியாப் பாவிமாரே. (30)

மாரான மூலிகையை வாங்கிமைந்தா
வணக்கமுடன் விரைக்காயை பிதுக்கிநன்றாய்
கேரான நேரமடா வுச்சிநேரம்
நேர்மையுள்ள மூலிகையை வைத்துக்கொண்டு
சீராக மதியமதிற் பூசைசெய்யச்
சிறப்பாகச் சக்கரையைக் கலந்துகொண்டு
சீராக மதியமதிற் பூசைசெய்யத்
தேவியெனும் புவனைசதந் தீர்க்கமாமே. (31)

---

மேற்கூறிய விஷயங்களை வெகு விபரமாக போகமகாரிஷி சிவ யோக ஞானம் பன்னிரண்டில் கூறியிருக்கிறது. பார்த்தறிக.

மூலிகைக் குணம்.

தீர்க்கமுள்ள புவனையவள் முன்னே நின்று
செவ்வையுட னென்மகனே செப்பக்கேளு
மார்க்கமுள்ள மூலிகைக்குக் கிரியைசுத்தி
மகத்தான கிரிகையிலே மனதுதோய்ந்தால்
ஆர்க்குநிக ரில்லாத வறிவேதங்கும்
அந்தரியுஞ் சாமீப வருளைக்காட்டும்
பார்க்கின்ற பலசமய நூலைப்பார்க்கப்
பத்திகொண்டு நின்றறிவு பதியுந்தானே. (32)

தானென்ற மூலிகையின் விபரஞ்சொன்னேன்
தாயான மனோன்மணிதன் றவத்தினாலே
தேனென்ற மந்திரமா மமுர்தந்தன்னைத்
தெகுட்டாத வமுர்தமதைத் தெளிவாய்வாங்கிப்
பானென்ற பாலமுர்தந் தனக்குமைந்தா
பக்குவமாஞ் சுத்திதனைப் பகரக்கேளு
கோனென்ற பாத்திரந்தான் சுத்திச்சுத்திக்
குருவான பாத்திரத்தைக் கரத்தில்வேண்டே. (33)

மந்திரத்தின் குணம்.

வேண்டியந்தப் பாத்திரத்தி லமுர்தம்விட்டு
விபரமுடன் மாலையிலே பூசைபண்ணி
ஆண்டவனூர்பதி நோக்கித் தியானஞ்செய்து
அருள்பெருகு வர்க்கவகை யமுதுகொண்டு
பூண்டமன துறுதியினால் ரேசகமேசெய்து
பூரணமாய்க் கும்பகத்திற் பூரணமாய்நின்றால்
தாண்டவத்திற் சிவனையென்ற திரிபுரைதான்வந்து
தன்மையுள்ள கண்மணியென் றருள்செய்வாளே. (34)

அருளீய்ந் துயோகத்துக் கறிவுஞ்சொல்லி
அருமையுடன் பூரணத்தி லறிவாய்நின்றால்
திருவிருந்த பதியான சாரூபபதவி
சிவசிவா சீக்கிரத்தில சித்தியாகும்
மருவிருந்த மவுனமடா மனோன்மணி பின்வீடு
மார்க்கமுடன் பண்டுதவும் யோகஞ்செய்வார்
குருவிருந்த பதிநோக்கித் தவமேசெய்தால்
கூடுறுதி யாகு மடா குருவைக்காரே. (35)

---

ஃஃ போகமகாரி[illegible] ஞானசராம்சம் நூறில், சகலவிஷயங்களை யும் சரிவரக்கூறியிருப்ப[illegible] லதனைக் கண் ணுறில் நன்கு விளங்கும்.

பூரணத்தின் குணம்.

காரப்பா மந்திரத்தின் மகிமைசொன்னேன்
காசினியி லிந்நூலைக் காட்டவேண்டாம்
வீரப்பா செய்வோரை யடுக்கவேண்டாம்
வேதாந்த மறிபாரைச் சேர்க்கவேண்டாம்
தேரப்பா மனந்தேறித் தெளிவாய்நில்லு
தெளிவான பூரணத்தின் செய்கைகேளு
ஆரப்பா யறிவார்கள் பூரணத்தின்செய்கை
யரகரா குருவருளா லறிவிப்பேனே. (36)

அண்டபிண்டசமாதி வைப்புமெழுது.

அறிவான பொருளாகு மண்டபிண்ட
மமைந்தகருப் பிண்டமதி னண்டந்தன்னைக்
குறியான தொடுகுறிபோ லண்டம்வாங்கிக்
கூர்மையுடன மேலோட்டைச் சீவிப்போட்டுப்
பரியான வண்டமென்ற யிளநீர்தன்னைப்
பக்குவமாய்க் கண்திறந்து ரவிபீசஞ்செலுத்தி
திருவான வெடியுப்பைப் பாண்டத்திட்டுத்
தெகட்டாத யண்டமதை யதன்மேல்வையே. (37)

வைத்துமே லுப்பிட்டு மேற்சட்டிமூடி
மார்க்கமுடன் சீலைசுத்தி(மண்) பூசிமைந்தா
கைத்திட்ட மாய்சமாதி தன்னில்வைப்பாய்க்
கனமாக நீயிருக்கு மொடுக்கந்தன்னில்
மெய்த்திட்ட"மாகவேமண் டலமேசென்றால்
மேன்மைபெறச் சமாதிதன்னை (விரும்பி) மிகத்திறந்து
மைத்திட்ட மாகவே பானைதனிலண்ட
மார்க்கமுட னண்டமதை மனதறிவால்வாங்கே. (38)

வாங்கியந்த வண்டத்தின் கருவைநீயு
மகத்தான பீங்கானில் விட்டுமைந்தா
பாங்குபெற ரவிதனிலே வைத்துக்காரு
பக்குவமாய்ப் பின்னுமதில் ரவிபீசஞ்சேரு
தீங்கில்லாக் கரியுப்பு நாலிலொன்று
செவ்வையுடன் பூரணத்திற் சேர்த்துநன்றாய்
தாங்காத ரவிதனிலே காயப்போடு
தன்மையுடன் காய்ந்துநன்றாய் மெழுகுமாமே. (39)

---

சுப்பிரமணியர் தேவிஞான தெரிசனம் பத்தில், மணிபூரண சித்தியும் அண்டம் பொருந்திநின்ற அமைப்பும் கூறியிருக்கிறது.

ஆமப்பா மெழுகெடுத்தும் பதனமாக
அன்பாக மேருதனி லடக்கம்பண்ணி
தாமப்பா யெவ்வேளை அவ்வேளை தன்னிற்
தயவாக மனதறிவா லிருந்துகொண்டு
நாமப்பா சொல்லுகிறோம் (மேருவை) முன்னிறுத்தி
நன்மையுடன் மானதமாம் பூசைசெய்து
காமப்பா லானபரி பூரணமேயென்று
காயாதி கற்பமென்று திணிந்துபோற்றே. (40)

போற்றுவது பூரணமே யேகவஸ்து
பொருளான அருவுருவே யென்றுபோற்றி
நாற்றிசையு மெனையாண்டு கொள்ளவந்த
நாரணியே கவுமாரி நாதாந்தத்தில்
தேற்றியே மனந்தேற்றித் தெளிவாய்நீயுஞ்
சிந்தைமன தொன்றாக வெனையாட்கொண்டு
காத்தருள வேண்டுமென்று மைந்தாநீயுங்
கருணையுள்ள பூரணத்திற் பணவிடைதானெடுமே. (41)

எடுத்திடுக்கை யைவைத்து வலக்கரத்தால்மூடி
யேகபரி பூரணியே யென்றுபோற்றி
அடுத்தமனைச் சுழிமுனையில் மனதைநாட்டி
யன்பாக ரேசகபூரகமுஞ் செய்து
தொடுத்தமன தறிவாலே வாசிபூட்டித்
தொடுகுறிபோற் கும்பகத்தி லிருந்துகொண்டு
கொடுத்துவிடு நாவின்மேற் பூரணத்தைமைந்தா
கும்மெனவே வாய்மூடி யிருந்துபாரே. (42)

பாரப்பா நீயிருந்து நாவுதனிலமுர்தம்
பாயுமடா வந்தமுர்தம் பசிதீரவுண்ணு
ஆரப்பா வுனக்கீடு சொல்லப்போறேன்
அரகரா தேவாதி தேவனுக்கும்
நேரப்பா குருவருளால் மனோன்மணிதான்வந்து
நிலைநிறுத்தி ஞானபதம் நன்றாய்ச்சொல்லி
பேரப்பா நீபெறவே பேர்தானென்று
பெருமையொடு சாயுச்சிய பதவியருள்வாளே. (43)

---

மேற்கூறிய விஷயங்களின் பூட்டுக்குத் திறவுகோல்போல சுப்பிரமணியர் சுத்தஞானம் நூலில், தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

### கட்டுக்கோடி கருவித்தை.

வாளப்பா சாயுச்சிய பதவிதனைமைந்தா
வரிசையுடன் நால்பதமும் நன்றாய்ச்சொன்னோம்
ஆளப்பா நால்பதமு மாண்டோர்யாரு
அருமையுள்ள சித்தரிலே கோடிக்கொன்று
மேலப்பா லோகமுடன் கீழுலகம்ரெண்டில்
விபரமுடன் வாழுமுயிர் பயிர்கட்கெல்லாம்
கேளப்பா செய்யாத வசியஞ்சொல்வேன்
கூற்புத்தின் மேற்கட்டுக் கொடியதனைவாங்கே. (44)

வாங்கியந்தக் கொடியதனை யுலரப்போட்டு
மார்க்கமுடன் கருக்கிநன்றா யெடுத்துக்கொண்டு
தீங்கில்லா வெடியுப்பு கர்ப்பூரஞ்சீனந்
தெகட்டாத யிந்துப்பு கரியுப்புங்கூட்டி
பாங்குபெற வஞ்சுப்புந் தண்ணீர்விட்டுப்
பக்குவமா யரைத்துருட்டி வட்டுப்பண்ணி
ஆங்கதைகொண் டேயெருவிற் புடத்தைப்போடு
அப்பனே தீய்ப்பிடித்துக் கருகுந்தானே. (45)

கருகின்ற கரிக்குநீ சாய்க்கறியுங்கூட்டிக்
கல்வமதில் பழச்சாற்றால் நன்றாயாட்ட
உரிகிநின்ற மெழுகதுபோல் மையுமாகும்
உகமையில்லா மையதனைச் சிமிளில்வைத்து
பெருகிநின்ற மையெடுத்துத் திலதம்போட்டுப்
பேருலகிற் சென்றுவர மைந்தாமைந்தா
அருகிநின்ற வுயிர்ப்பயிர்கள் வணக்கமாகித்
தன்பதமே கெதியெனவே சார்வார்பாரே. (46)

பாரப்பா வசியமொன்று சொன்னேனிந்தப்
பக்குவத்தை யொருவருக்கும் பகரவேண்டாம்
தேரப்பா மனந்தேறி வசியம்பூண்டு
செவ்வையொடு தவசிருப்பாய்ச் சிவனேயென்று
காரப்பா பெரியோரைத் தொண்டுபண்ணிக்
காசினியில் நன்மையுள்ள நாட்டமாய்நில்
பேரப்பா தேவாதி தேவனென்பார்
பெருமையுள்ள வஞ்சனத்தின் வகையைக்கேளே. (47)

---

☞ திருமூலர் ஞானோபதேசம் முப்பதில், ஞானோபதேசம் முதல் ஒவ்வொன்றும் வெகு தெளிவாய்க்கூறியிருக்கிறது. கண்டுணர்க

கேளப்பா வரிதாரக் கட்டிவாங்கிக்
கிருபையுள்ள கல்லுப்புஞ் சருகுங்கூட்டி
மாளப்பா கல்வமதி லாட்டிப்பில்லை
மார்க்கமுடன் தான்பிடித்துக் காயப்போடு
கேளப்பா வில்லாமற் புடத்தில் கன்றாய்க்
கூர்மையுடன் கருக்கியதை யெடுத்துக் கொண்டு
தேளப்பா யேரண்டத் தெண்ணெய்விட்டு
தெளிவாக மத்திக்க மையாய்ப்போமே. (48)

மையான வஞ்சனத்துக் கிதுவேமூலம்
மார்க்கமுடனஞ்சன தேவிதன்னை
மெய்யாக வவள்பதத்தைப் பணிந்துகொண்டு
மேன்மைபெறச் சிமிள்தனிலே யடக்கம்பண்ணி
கையாக மைச்சிமிளைத் திறந்துபாரு
கண்கரித்து நீர்விழுந்து திறக்குங்கைதான்
எய்யாத பாதாளந் துலைதானேடும்
என்மகனே யிதில்நிதிகள் காணலாமே. (49)

காணுவது வெகுநிதிகள் கண்டாயானல்
கண்ணிமையாற் பாராதே கடக்கநில்லு
பேணுவது யெந்தநிதி யென்றாயாகிற்
பேரொழியாந் தீபவொளி பேணித்தேடு
தோணுவது சொரூபநிலை யதுதானப்பா
சொரூபமென்று லாரறிவார் சோதிசோதி
ஊணுவது வுடல்பொருளோ டாவிமூன்று
முற்றுப்பார் வெட்டவெளி யாகுந்தானே. (50)

தானென்ற சரிதைமுதல் ஞானவகைசொன்னேம்
சமரசமாய்த் தேகவச்சிரக் காயஞ்சொன்னேம்
கோனென்ற குருவருளால் தவமகிமைசொன்னேம்
கூர்மையுள்ள தவமதுக்கு நிஷ்டைசொன்னேம்
மானென்ற நிஷ்டைதனக் குறுதியான
மகத்துவமாந் தெரிசனத்தை வழுத்தக்கேளு
தேனென்ற பிரிதிவா மதனேடொக்கத்
தெகட்டாத வமுர்தமென்று பூரமாமே. (51)

---

இவ்விஷயங்களனைத்தும் தெளிவாய்த் தெரிந்து கொள்வதற்கு தெட்சணாமூர்த்தி சூஸ்திரம் எட்டில் சொல்லியிருக்கிறது.

வாகை களிம்பு.

பூரமுடன் லிங்கமென்ற தேய்வுசேரு
புகழாக வாயுவென்ற நாகஞ்சேரு
வாரவென்ற நாலுடனே மாயிகாத
மார்க்கமுள்ள துருசுடனே வுப்பங்கூட்டிப்
பாரமென்று மனதிலெண்ணி யெழுங்கூட்டிப்
பக்குவமாய்க் கல்வமதிற் பழச்சார்விட்டு
காரமென்ற சாரமதை விட்டேயாட்டிக்
களிம்பான பருவமதிற் சிமிளில்வையே. (52)

வையப்பா சிமிளில்வைத்த களிம்புதன்னை
மார்க்கமுடன் பணவிடைதா னெடுத்துக்கொண்டு
வெய்யப்பா களஞ்சிவெள்ளித் தகட்டிற்பூசி
விருப்பமுடனோட்டில்வைத்துச் சீலைசெய்து
நையப்பா யெருவடக்கிப் புடத்தைப்போடு
நன்றாகச் சற்குருவைத் தொழுதுநில்லு
பையப்பா புடமாறி யெடுத்துப்பாரு
பழுத்துமிகப் பதினாறு வயதாம்பாரே. (5

வேதை மார்க்கம்.

பாரப்பா செம்பினிலே தடவிநல்ல
பக்குவமாய்ப் புடம்போடப் பழுக்குமப்பா
நேரப்பா குடவனைத்தான்ற கடாய்த்தட்டி
நேர்மையுள்ள மருந்ததனைக் தடவிக்காய்ச்ச
ஆரப்பா வறியார்கள் குடவன்மாற்று
ஆறுவய தானதொரு பொன்றானுகுங்
தேரப்பா மனக்தேறி யோகம்பாரு
சிவசிவா சிவயோக முத்தியாமே. (54)

முத்தியுள்ள தவமகிமைக் குறுதியென்ன
முதலான யோகமடா சிவயோகந்தான்
பத்திகொண்டு பார்த்தவனே சித்தன்சித்தன்
பரமசிவ யோகமதைப் பாரார்தானும்
அத்தியென்ற தேகமது வழிந்துபோகும்
அழிந்தாலு மோட்சநிலை யறியமாட்டார்
சித்தமெந்தன் பாக்யமென்று சிவயோகத்தைத்
தேர்ந்தவனே சிவயோகி யாகுந்தானே. (55)

---

இச்சாஸ்திரத்தில் மறைப்பாயுள்ளவைக் காணவேண்டுமானால் யோக ஞான சாஸ்திரத் திரட்டு முதற்பாகத்தை வாங்கிப்பார்க்கவும்.

### சிவயோகப்பெருமை.

தானேதான் சிவயோகஞ் செய்யவேண்டுந்
தன்மையுள்ள பெரியோரைப் பணியவேண்டும்
வீணேதா னறிந்ததினா லேதுண்டப்பா
வீண்பேச்சாய்த் திரிவாரை யடுக்கவேண்டாம்
தூணேதான் றுரும்பானாற் றுரும்புதூணுஞ்
சொல்லுவார் பெரியோர்கள் பழமையாகும்
பூணேநீ சிவயோகம் பூண்டால்தேகம்
பொன்றுரும்பு போல்தேகம் புதுமையாமே. (56)

ஆமப்பா தேகத்துக் குறுதியென்ன
அருளான காயாதி கர்ப்பங்கர்ப்பம்
தாமப்பா காயாதி கர்ப்பங்கொண்டால்
தவமான தவப்பலந்தா னதுவேயாகும்
போமப்பா வபமிருத்து வெங்கேபோச்சு
புத்திகொண்ட பூரணத்தி லொடுங்கிப்போச்சு
நாமப்பா வென்றூபத மெங்கேபோச்சு
நந்தியென்ற தீப்பிடித்து நசித்துப்போச்சே. (57)

போச்சப்பா நந்தியென்ற செந்தீப்பட்டுப்
பேறறிந்து நரைதிரையும் பொடித்துப்போச்சு
மூச்சப்பா வடங்கிநின்ற வண்டந்தன்னில்
முனையான சுழிமுனைமேற் றீபந்தோன்றுங்
காச்சப்பா வத்தீபந் தன்னிற்றேகங்
காச்சினால் தேகமதில் கசடுபோகும்
ஆச்சப்பா வக்கசடு வகண்டுதானால்
அம்பரத்தின் தெரிசனத்தி லடுக்கலாமே. (58)

### சாஸ்திர விபரம்.

அடுக்காக வாயிரத்தை யடுத்துப்பாரு
வதின்பிறகு பலதிரட்டை யறிந்துபாரு
முடுக்கான வினோதவகை நூறும்பாரு
மூர்க்கமுள்ள வயித்தியத்தை முழுதும்பாரு
ஒடுக்கமுள்ள பலபாஷை யுறுதிபாரு
வுண்மையுள்ள சோசியமாம் பத்தும்பாரு
திடுக்கமுள்ள மனதொடுங்க ராமர்வாக்யஞ்
செப்பினசொற் றவறாமற் றேர்ந்துபாரே. (59)

☞ காலாங்கி நாதர் உபதேச ஞானம் முப்பத்திநாலில், யோக ஞானத்துதவியானவாசியும், சிவயோகமர்மமும்தெளிவறத்தெரியலாம்

பாரப்பா நாம்சொன்ன வாக்யந்தன்னிற்
பழுதொன்றும் வாராமற் பற்றிப்பார்க்க
நேரப்பா சிவயோக மார்க்கஞ்சொன்னேன்
நெறியான நூல்தேடி நினைவாய்ப்பாரு
தேரப்பா மனந்தேறுந் தேகந்தேறுஞ்
சிவசிவா வாசியதற் குறுதிதோன்றும்
வீரப்பா கொண்டுதலை தெறிக்குமாந்தர்
வீணருடன் பேசாதே விண்ணைப்பாரே. (60)

தன்னைத்தானறிதல்.

விண்ணைப்பார் தன்னைப்பார் மண்ணைப்பாரு
மேன்மைபெறக் குருவருளை மேவிப்பாரு
பெண்ணைப்பார்த் தலையாதே பெண்டான்றேகம்
பிரியமுடன் றேகமதைப் பேணிப்பார்த்தால்
கண்ணப்பா துலங்குமடா வந்தக்கண்ணுற்
காணலாஞ் சித்துவெகு கண்ணிற்காணும்
மண்ணப்பா வென்றுசடந் தன்னைப்பேணு
மாந்தருக்கு யென்னவரு மண்தானுமே. (61)

ஆமப்பா மண்ணான பிரிதிவினாலே
அநேகவஸ்து வுண்டாச்சு அதேதென்றாக்கால்
வாமப்பால் மதியமூர்தந் தன்னாலந்த
மகத்தான வாகாயஞ் சிவமுமாச்சு
நாமப்பா சொல்லுகிறோம் மண்ணும்விண்ணும்
நலமாதி வாதியந்தஞ் சத்திசிவமாச்சு
தாமப்பா குருவருளால் சத்திசிவந்தன்னைத்
தாரணியிற் கண்டவனே தவசியாமே. (62)

ஆமென்ற தவமுறுதிக் கின்னமொன்று
அன்பாகச் சொல்லுகிறோம் நன்றாய்க்கேளும்
நாமென்ற சொல்லகத்திப் பூமிநாதம்
நன்றான நாதமடா சத்திசத்தி
தாமென்ற பிரிதிவாந் தன்னோடொக்கத்
தயவான கெவுரியுடன் சிலையுங்கூட்டி
ஊமென்ற நாகரசங் கூடச்சேர்த்து
ஓர்நிறையாய்க் கல்வத்தில் நன்றாயாட்டே. (63)

---

மேற்கூறிய விஷயங்களைத் தெளிவாய்த் தெரிய விரும்புவோர் காலாங்கிநாதர் ஞானசூஸ்திரம் இருபத்தொன்பதில் கண்டுணர்க.

ஆட்டுவது சம்பழத்தின் சாறுலாட்டி
அப்பனே நெட்டடங்க நன்றாயாட்டிக்
கூட்டுமது ஒன்றாக்கி வட்டுப்பண்ணிக்
குண்டலமாஞ் சட்டிதனில் நடுவேவைத்துப்
பூட்டுவது தாம்பரத்தின் கிண்ணிதன்னால்
பொருந்தவே மூடிநன்றாய் மணலும்போட்டுத்
தாட்டிகமாய்த் தீயெரித்துப் பதத்தைப்பாரு
தயவான பதமதுவைச் சொல்லுவேனே. (64)

வேதைமார்க்கம் கூறுவது.

சொல்லுவேன் சொரிந்தமணல் கருகிற்றானால்
சுத்தமுள்ள பக்குவமென் றெடுத்துக்கொண்டு
வெல்லுவே னிதற்கிரட்டி தாம்பரத்தை
விசையாக வுருக்கியந்த மையைத்தானும்
நல்லுவே னுருக்குமுகந் தன்னிலீய
நாற்றமுள்ள செம்பதுவுங் கட்டிப்போச்சு
கொல்லுவே னென்றுசொல்லி வெள்ளிபொன்னில்
குற்றமற்ற செம்புமூன் றொன்றாய்க்கூட்டே (65)

கூட்டிநன்றாய்க் குகைதனிலே யுருக்கிப்பாரு
குருவான திருவருளால் மாற்றெட்டாகும்
தாட்டிகமாய்ப் பத்திலொன்று தங்கஞ்சேர்க்கத்
தயவான தங்கமடா யென்னசொல்வேன்
பூட்டான பூட்டருக்குஞ் சத்திசிவந்தன்னைப்
பூரணமாய்க் கண்டுமன தறிவாய்நின்றால்
தீட்டிமுனை மழுங்காத சுழிமுனையின்முன்னே
திருவான அறிவுருவாந் தீபவொளியாமே. (66)

ஆமப்பா யின்னமொன்று கருவைக்கேளு
ஆதியென்ற லிங்கமுடன் துருசுங்கூட்டித்
தாமப்பா கண்டிடைக்கு ஆதிசேர்த்துச்
சம்பழத்தின் சாறதினாற் கல்வத்தாட்டி
நாமப்பா சொன்னபடி வட்டுப்பண்ணி
நன்மைபெற மணல்மறவிற் புடத்தைப்போடு
சாமப்பா சரக்குவகை மூன்றுதானுஞ்
சமரசமாய்க் கட்டியது திட்டமாமே. (67)

---

☞ புண்ணாக்குச்சித்தர் செயநீர் நாற்பத்தைந்தில், சுண்ணம் வழலை வாத முதலிய விபரங்களைப் பூர்த்தியாய்ப் பார்க்கலாம்.

திட்டமுடன் பதமாறி யெடுத்துக்கொண்டு
செவ்வையுடன் செம்புருக்கி மருந்தையீவாய்
இட்டமுடன் செம்பிடைக்கு ரெட்டியீவா
யிருண்டசெம்பு கட்டியது யிருகிகிற்கும்
பட்டசெம்பு நாலுடனே வெள்ளியாரும்
பக்குவமா யுருக்கிப்பார் மாற்றாகும்
நட்டமென்ன பத்திலொன்று தங்கஞ்சேர்க்க
நயமாக யெட்டுவய தாகும்பாரே. (68)

வெள்ளி வித்தை.

பாரப்பா பிரிதிவின் கடாட்சத்தாலே
பக்குவமாய் வெகுதொழில்க ளாடலாகும்
தேரப்பா மனந்தேறி வெள்ளிவித்தைச்
செவ்வையாய்ச் சொல்லுகிறோம் நன்மையாக
நீரப்பா நிறைந்துநின்ற வெள்ளீயத்தில்
நினைவாக வந்திருக்கும் ரசத்தைத்தாக்கி
சேரப்பா யதற்குநிகர் பாஷாணத்தைச்
சேர்த்துநன்றாய்ப் பிரிதிவைச் சேர்த்துக்கொள்ளே. (69)

சேர்த்துநன்றாய்க் கல்வத்தில் பழச்சாற்விட்டுச்
செவ்வையாய்த் தானரைத்து வட்டுபண்ணிப்
போற்றிநன்றாய் மண்மறைவிற் புடத்தைப்போடு
போக்கான நாற்சரக்குங் கட்டிப்போகும்
பார்த்திபனே யதையெடுத்து வைத்துக்கொண்டு
பதிவாகச் செம்புருக்கி யதனிற்றாக்கு
நாற்றிசையு மெய்க்கவேதான் வெளுத்துப்போகும்
நன்றாகப் பத்திலொன்று வெள்ளிசேரே. (70)

சேர்த்துருக்கிப் பார்க்கவெள்ளி மாற்றுத்தானும்
செவ்வையுடன் பத்துமாற் றாகுமப்பா
பார்த்திபனே யிவ்வேதை பத்திப்பார்த்து
பத்திகொண்டு யோகமதில் பதிவாய்நில்லு
கார்த்தருள வேண்டுமென்று குருவைக்காரு
கருவான மதியமுர்த முள்ளேகொள்ளு
பூர்த்தமலர் வாசனைபோல் யோககிஷ்டை
புனிதமுட னுசனமும் புகலக்கேளே. (71)

☞ அம்பிகானந்தர் உபதேச ஞானம் இருபத்தைந்தில், இவ் விஷயங்களனைத்தும் வெகு விபரமாக விவரித்திருக்கிறது.

நிஷ்டை விபரம்.

கேளப்பா நிஷ்டையுட விபரந்தன்னைக்
    கெணிதமுள்ள பிர்ம்மநிஷ்டை மாலிநிஷ்டை
கோளப்பா யில்லாத ருத்திரநிஷ்டை
    குருவான மயேஸ்பரத்தி னிஷ்டைதானும்
ஆளப்பா சதாசிவத்தி னிஷ்டையோடே
    ஐந்துநிஷ்டை யாகுமதின் விபரங்கேளு
வாளப்பா பிர்ம்மநிஷ்டை யேதென்றுக்கால்
    மார்க்கமுடன் சுகாசனமா யிருந்துகொள்ளே. (72)

பிர்ம்மநிஷ்டை.

இருந்துகொண்டு சுகாசனமா மைந்தாநீயு
    மின்பமுடன் ரேசகபூ ரகமும்பண்ணி
அருந்தவமாய்க் கும்பகத்தி லிருந்துகொண்டு
    அசையாத மூலமதை யன்பாய்ப்பார்த்தால்
திருவிருந்த மலர்க்கமல மீதிலேதான்
    தேவனெனும் பிர்மத்தைத் தெரிசிப்பாய்பார்
குருவிருந்த குண்டலியின் மூலமப்பா
    குணமாக வம்மூலங் குறியாய்ப்பாரே. (73)

மாலிநிஷ்டை.

குறியான பிர்மத்தி னிஷ்டைசொன்னோம்
    குணமாக வதின்மேலே கூறக்கேளு
அறிவான மாலினுட நிஷ்டைதானும்
    அப்பனே யஷ்டயோக மமைத்துக்கொண்டு
விரிவான ரேசகபூ ரகமும்பண்ணி
    மேலான கும்பகத்தில் வாசிபூட்டி
நெறியான பூரகத்தைப் பார்த்தாயானால்
    நிசமாக விஷ்ணுபதம் நேரலாகும். (74)

உருத்திர நிஷ்டை.

ஆமப்பா மாலினுட நிஷ்டைசொன்னோம்
    அரகரா ருத்திரநிஷ்டை யருளக்கேளு
நாமப்பா சொல்லுகிறோம் பாதம்ரெண்டும்
    நன்றாக விசைபூட்டித் துடைமேலேற்றித்
தாமப்பா ரேசகபூ ரகமும்பண்ணித்
    தன்மைபெறக் கும்பகத்தில் வாசிபூட்டி
வாமப்பால் மதிபெருகு மனகதத்தை
    மார்க்கமுடன் பார்த்ததினால் வளமைகேளே. (75)

---

இதிற் கண்ட விஷயங்களை மவகு துட்பமாக போகமகாரிஷி உபதேசஞானம் நூற்றைம்பதைப்பார்த்தால் சுலபமாய்த்தெரியலாம்

வள்மையென்ன சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
மார்க்கமுள்ள ருத்திரரை வளமாய்க்காண்பாய்
தளமைபெற ருத்திரரைக் கண்டபோது
சகலசவு பாக்கியமுந் தானேதாமாகும்
இளமையுள்ள ருத்திரநிஷ்டை சொன்னோமையா
ஏகாந்த மஷ்டபா நிஷ்டைகேளு
நலமைபெறக் குந்தவைத்து வலக்கால்தூக்கி
நன்றாக விடக்கால்மேல் நயந்துபூட்டே. (76)

மயேஸ்பர நிஷ்டை.

பூட்டியந்தக் கால்யிரண்டும் நிலத்திற்றாக்கிப்
பூரணமாம் ரேசகபூ ரகமும்பண்ணித்
தாட்டிகமாய்க் கும்பகத்தில் வாசிபூட்டி
தயவாக விசுத்திநிலை தன்னைப்பார்த்தால்
நாட்டதிக மாகமயேஸ் பரனார்பாதம்
நன்றாகத் துலங்குமடா நயந்துபாரு
தேட்டான தேட்டுகள்தா னென்னவென்றால்
சிவசிவா வைந்துநிஷ்டைத் திறமாய்த்தேடே. (77)

சதாசிவநிஷ்டை.

திறமாக மயேஸ்பரத்தி நிஷ்டைசொன்னோம்
சிவசிவா சதாசிவத்தி னிஷ்டைகேளு
உறமாக வொட்டியாணம் பந்தம்பண்ணி
ஒருமையுடன் யோகதெண்டை யுட்கைசேர்த்து
நிறமாக விபூதியுந்தான் தளமாய்ப்பூசி
நேசமுடன் ரேசகபூ ரகமுஞ்செய்து
பரமான கும்பகத்தில் வாசிபூட்டிப்
பத்திகொண்டு ஆக்கினையைப் பத்திப்பாரே. (78)

பார்க்கையிலே சதாசிவத்தின் பாதந்தோன்றும்
பதியான மனோன்மணிதா னமூர்தமீவாள்
தீர்க்கமுட னந்தமூர்தங் கொண்டபோது
சிவசிவா கயிலாயத் தேகமாகும்
மார்க்கமுள்ள மதியமூர்தந் தன்னாற்றேகம்
மகத்தான தேகமடா பிர்மம்பிர்மம்
ஆர்க்குமிந்த பிர்மபதங் கிடைக்குமோதான்
அருளான பூரணத்தா லமைக்கும்வாறே. (79)

☞ காலாங்கிநாதர் இந்திரஜாலஞானம் நாற்பத்தியாறில் வாசி மார்க்கத்தையும் ஞானசாதனநாட்டத்தையும் தெளிவாய்த்தெரியலாம்.

மதியமூர்த லேகியம்.

வாரான மதியமூர்த மொன்றுசொல்வேன்
மகத்தான வமூர்தலே கியந்தான்மைந்தா
பேரான வாணியோர் படிதான்வாங்கிப்
பிரியமுட னைந்துபலஞ் சர்க்கரைதான்சேர்த்து
கூபாக வடுப்பேற்றித் தீயைமூட்டிக்
குணமாகப் பாகுவருஞ் சமையந்தன்னில்
சீராகச் சாதிக்காய் சாதிப்பத்திரி
திறமான கிராம்புமூன் றொன்றுல்வாங்கே. (80)

வாங்கடா முச்சரக்கு பலமூன்றாக
மைந்தனே யிதற்கிரண்டு மூலிகைதான்சேர்த்து
பங்குபெற விளவறுப்பாய் வறுத்துக்கொண்டு
பதிவாகச் சூரணமே செய்துமைந்தா
தீங்கில்லாப் பாகுதனிற் றாவித்தூவித்
திறமாகக் கிண்டிவிடு மைந்தாமைந்தா
ஆங்கதிகொண் டேயிருகிப் போனாற்பின்னு
மப்பனே சர்க்கரையைச் சேர்த்துக்கிண்டே. (81)

கிண்டிபந்த லேகியத்தைப் பதனமாகக்
கிருபையுடன் பரணிதனி லடக்கம்பண்ணி
கொண்டதொரு லேகியத்தில் பணவிடைத்தான்
குறிப்பாகத் தானெடுத்து வைத்துக்கொண்டு
அண்டர்பிரா னருள்பெருக புயத்தைப்போற்றி
யன்பாகப் பூசித்து லேகியத்தைமைந்தா
நின்றுடும் நாவினில்வைத் தமூர்தங்கொண்டு
நினைவாக ரேசகபூ ரகமும்பண்ணே. (82)

பண்ணப்பா கும்பகத்தில் வாசிபூட்டிப்
பத்திகொண்டு நின்றகினற் பலிக்குஞ்சித்தி
விண்ணப்பா தான்றுலங்கி விண்ணிலேதான்
விதமீத் தீபவொளி கண்ணிற்காணும்
நண்ணப்பா வத்தீபந் தன்னைமைந்தா
நயமாகக் காயமதி லுறுதியாகும்
கண்ணப்பா காணுடனே செவ்வையானால்
கைலாயம் வைகுந்தம் காணலாமே. (83)

☞ கொங்கணர் திருமந்திர ஞானம் 12-ல், ரேசகபூரக கும்பகமும், மதியமுதம்புசித்து அயிக்கமாகும் விபரமும் தெளிவாய்த்தெரியலாம்

வல்லாரை கர்ப்பம்

காணவே யின்னமொரு கர்ப்பஞ்சொல்வேன்
கருவான வல்லாரை யார்காண்பார்கள்
தோணவே வல்லாரை சொல்லக்கேளு
தொல்லுலகில் மற்றகரு சொல்லப்போமோ
பேணவே குருவருளால் சொல்வேனப்பா
பிண்டமடா வமைத்தமுத லாறுமாதம்
பூணவே யக்கருவை வாங்குதற்குப்
பூரமுடன் வெல்லமதைப் புணர்ந்துபாரே. (84)

பாரப்பா பூரமுடன் வெல்லம்ரெண்டும்
பக்குவமா யெருக்கம்பால் தன்னாலாட்டி
சீரப்பா குன்றுமணி யளவாய்ச்செய்து
திறமாக வொருவுண்டை மாதுக்கீய்ந்தால்
வீரப்பா செய்யாமற் பிண்டந்தானும்
விதனமன்றி விரும்பிமிக வருகுமப்பா
நீரப்பா வழுரிதனில் பூரம்போட்டு
நினைவாக வல்லாரை யதனிற்போடே. (85)

போட்டுநன்றாய் நீர்வற்ற வெரிப்பாயப்பா
புகழாக நீர்வற்றி யவிந்துதென்றால்
தேட்டமுட னதையெடுத்துக் கல்வத்திட்டுத்
திறமாக மைப்போலே யாட்டிக்கொண்டு
பூட்டுவாய் மிளகுடனே சாதிக்காயும்
பூவுடனே பத்திரியு மேலங்கூட்டி
ஆட்டுவாய் நெய்பாலை நன்றாய்மைந்தா
அரைத்தெடுத்துப் பரணிதனி லடக்கம்பண்ணே. (86)

பண்ணப்பா பரணிதனி லடக்கம்பண்ணி
பக்குவமாய் மேல்மூடிச் சீலைசெய்து
நண்ணப்பா குழிவெட்டிப் புகைத்துப்போடு
நலமான மண்டலஞ்சென் றெடுத்துக்கொண்டு
திண்ணப்பா குண்டுமணி யளவின்வீதம்
திறமாக மண்டலமே கொண்டாயானால்
எண்ணப்பா நான்சொல்லப் போறேனையா
ஏகாந்தச் சிவயோகத் தியல்புதானே. (87)

---

இவ்விஷயங்களனைத்தும் குதம்பைச்சித்தர் ஞானசூஸ்திரம் 18ல் வெகு தெளிவாயிருக்கிறது வாங்கி வாசித்துணருங்கள்.

தானென்ற தத்துவத்தை யறியவேண்டும்
தன்மையுள்ள பூரணத்தைக் காணவேண்டும்
ஊனென்ற மதியமுர்தங் கொள்ளவேண்டும்
உ.கமையிலாச் சத்திசிவ பூசைவேண்டும்
ஈனென்ற வாணவத்தை நிறுத்தவேண்டும்
நாதாந்தப் பேரொளியைக் காணவேண்டும்
வீணென்ற வெறும்பேச்சாய்த் திரியவேண்டாம்
வேதாந்தக் கர்ப்பமொன்று சொல்லக்கேளே. (88)

கடுக்காய்லேகியம்.

சொல்லக்கேள் கடுக்காய்லே கியத்தைமைந்தா
சோதியென்ற கடுக்காய்தா னுர்காண்பார்கள்
விள்ளக்கேள் பொற்கடுக்காய் செனித்தநாளில்
விபரமுடன் மற்றகடுக் காயைவாங்கி
அள்ளக்கே ளக்காயைத் தறித்துநல்ல
அப்புவினிற் றுன்போட்டுப் பிசைந்திறுத்திக்
கொள்ளக்கேள் நீரெல்லாம் பிழிந்துநல்லக்
கூர்மையுள்ள வெயில்தனிலே காயப்போடே. (89)

போட்டெடுத்து மறுபடியு முரலிற்றுக்கிப்
பொடியாகத் தானிடித்துத் தண்ணீர்விட்டுத்
தாட்டிகமாய்த் தான்பிசைந்து யிறுத்துப்போடு
தன்மையுடன் முன்போலே காயப்போட்டு
வாட்டிபெடு பத்துமுறை யிவ்விதமேயாக
மார்க்கமொடு செய்ததினால் வளமையாகும்
தேட்டமுட னின்னமொரு சுத்திசொல்வோஞ்
சிவசிவா பழங்காடி தன்னைவாங்கே. (90)

வாங்கிநன்றாய் முன்போலே கரைத்திறுத்து
மைந்தனே நீர்வற்றக் காயப்போடு
ஏங்கியே திரியாதே சம்பழத்தின்சாற்றி
லிறுக்கவே பிசைந்துருட்டி ரவியிற்போடு
ஆங்கதுகொண் டேயெடுத்துப் பொடியதாக்கு
அப்பனே பீங்கானி விட்டுக்கொண்டு
தீங்கில்லாப் பழச்சாறு பிழிந்துக்கொண்டு
செவ்வையாய் நிதானித்து வுப்புச்சேரே. (91)

இதிற்கூறிய அரிய விஷயங்களனைத்தும் இடைக்காட்டுச் சித்தர் ஞானசூஸ்திரம் எழுபதில், தெளிவாய்த்தெரியலாம். பார்த்துணர்க.

சேரப்பா வுப்புமிஞ்சிக் கறிப்பில்லாமற்
செவ்வையுடன் தானரைத்து யிறுத்துக்கொண்டு
வாரப்பா கடுக்காய்சூ ரணத்தில்மைந்தா
வரிசையுடன் சாறுவிட்டுப் பிசறிக்கொண்டு
நேரப்பா பதப்படுத்தி நிழலில்வைத்து
நேர்மையுடன் பரணிதனி லடக்கம்பண்ணி
காரப்பா பொருத்தநாள் பார்த்துநீயும்
கருவான சூரணத்தில் பணவிடைதான்கொள்ளே. (92

கொள்ளவே மண்டலத்திற் சீதம்போகுங்
கொண்டதொரு மலங்கள்நிதங் களிந்துபோகும்
மெள்ளவே வாதநீர் பித்தநீரும்
மேலான சிலேத்துமத்தின் சீதங்கட்டும்
சுள்ளவே வாங்கிவிடுங் கடுக்காய்கர்ப்பஞ்
சுகமாகக் கொண்டுவர நரைதிரைகள்மாறும்
விள்ளவே வேண்டாங்காண் தேகவச்சிரம்
மேலான வயதுசிறு வயதாம்பாரே. (93)

பாரப்பா யிந்தமுறை யார்க்கென்றாலும்
பகராதே ராமரிட வாக்கியந்தன்னை
காரப்பா மனதுருதி யாலேமைந்தா
கருவான நூலிருக்கு தென்றுசொல்லி
வீரப்பா கொண்டுமதி கெட்டுநீயும்
வீணருடன் வாய்சமர்த்தால் விளம்பினுக்கால்
நீரப்பா தான்பெருகி சிரசிலேறி
நின்றநிலை தப்பியுட லழிந்துபோமே. (94)

உடலழிந்து போனதினா லுனக்கேதுண்டு
உண்மையுடன் மவுனமதா யிருந்தாயாகில்
சடலமென்ற வாக்கையது நிலைக்குமப்பா
சண்டாளப் பயல்களுற வாகாதையா
படலறிந்து திறக்கறியா நாய்கள்போலப்
பாவிகள்தான் பொய்பேசிப் பாதவிப்பார்
குடலடுத்து குணமறிந்து கர்ப்பங்கொண்டு
குருவான பதிநோக்கிக் குணமாய்நில்லே. (95)

---

புண்ணாக்குச் சித்தர் சுண்ணச்செயநீர் 45-ல், கற்பம், குளிகை லேகிய முறைகளும் கூறப்பட்டிருக்கிறது. வாங்கிப்பாருங்கள்.

குணமான காயாதி கர்ப்பந்தன்னைக்
கூறறிந்து கொண்டுவரும போதிலேதான்
மணமான வெண்ணெயொடு புளியுமாகா
மாண்டிறந்த மீனுகா யிறச்சியாகா
கனமாக நான்சொன்ன விந்தநாலுங்
காசினியோர் தானறிந்து தள்ளானுயிற்
பிணமாகிப் போய்விழுவா னையாவையா
பிலத்ததொரு புத்தியினுற் கண்டுதள்ளே. (96)

தயிலம்.

தள்ளப்பா மற்றதெல்லாங் கொண்டுதேறு
தவமான சடத்திற்கு வுறுதியாகும்
கொள்ளப்பா தயிலமொன்று சொல்லக்கேளு
கூர்மையுள்ள வண்டமடா பலம்பத்தாகும்
விள்ளக்கேள் சருகுபல மன்பதாகும்
விளம்பினது ரெண்டுமடா வாதியந்தம்
அள்ளக்கேள் ரெண்டையுமே பொடியாய்ச்செய்து
அப்பனே பாண்டத்தி லடைத்திடாயே. (97)

அடைத்ததின்மே லமுரிவிட்டுக் களிபோற்கிண்டி
யரகரா ரவிதனிலே யுலர்த்திக்கொண்டு
திடத்துடனே குழித்தயில மிறக்கியேதான்
செவ்வையுடன் பரணிதனி லடக்கம்பண்ணி
படைத்ததொரு வண்டமதை முன்போற்சுத்திப்
பக்குவமாய்ச் செய்துகொண்டு மைந்தாகேளு
செடத்துடைய சத்திபிட நாதமொன்று
செங்கமல மாலினுட நாதம்ரெண்டே. (98)

ரெண்டுடனே ஒன்றதனைச் சேர்த்துக்கொண்டு
நேர்ாக அமுரிவிட்டுக் கல்வத்தாட்டி
விண்டுப்போல் வட்டதனைப் பிடித்துநன்றுய்
வெய்யில்தனிற் காயவைத்துச் சீலைசெய்து
அண்டர்பிரான் றனைத்தொழுது புடத்தைப்போடு
அப்பனே புடமாறி யெடுத்துப்பாரு
மண்டலங்கள் மெய்க்கவேதான் வெளுத்துநீறி
மாசற்ற பற்பமதா யிருக்குந்தானே. (99)

---

தயிலத்திற்கு வேண்டிய மூலிகைகளும், சித்தர்கள் வசிக்கும் குகைகளும், காலாங்கிநாதர் ஞான விந்தரகசியம் 30-ல் பார்க்கலாம்.

தானென்ற பற்பமதை யெடுத்துக்கொண்டு
　　தன்மையுள்ள பரணிதனி லடக்கம்பண்ணி
தேனென்ற தயிலமதிற் பணவிடைதான்பற்பஞ்
　　செவ்வையுடன் றன்குழைத்துக் கொண்டாயாகில்
ஊனென்ற தேகமது வலுத்துநல்ல
　　வுறுதியுள்ள வாசியது வசையாதப்பா
கோனென்ற குருவருளா லிந்தகர்ப்பங்
　　கொண்டுசிவ யோகமதிற் குறித்துநில்லே. (100)

நில்லென்ற சிவயோக மார்க்கந்தன்னில்
　　நீமகனே மனதுறுதி யாகநின்றால்
சொல்லென்ற சொற்களெல்லா மந்திரந்தானுங்
　　அருவமுள்ள தேகமது பிற்மமாகும்
வில்லென்ற விசைபோலே வாசிதானும்
　　வேதாந்தச் சுடரொளிபோல் மேவிநிற்கும்
மல்லென்ற மல்பிடித்தாப் போலேவையா
　　வாசியது தேகமதில் வலுக்குந்தானே. (101)

தானப்பா சிவயோகஞ் செய்யும்போது
　　தன்மையுள்ள தூபமொன்று சொல்லக்கேளு
பூணப்பா வண்டமது பலந்தான்ரண்டு
　　புகழ்பெரிய கஸ்தூரி மஞ்சள்தானும்
தேனப்பா மணஞ்சிட்டிக் கறுவாய்ப்பட்டைத்
　　தேக்குடனே யதிற்கட்டைத் தேவதாரம்
காணப்பா கிழங்குடனே கிளியூறல்பட்டை
　　நலமான சாதிக்காய் ரசனைகூட்டே. (102)

கூட்டப்பா சரக்குவகை பதினொன்றுந்தான்
　　குணமாகக் கல்வத்திற் றூளாய்ப்பண்ணி
மாட்டப்பா பசுவினெய் தன்னாலாட்டி
　　மைந்தனே யகீட்டிவிடு மெழுகுபோலே
நாட்டப்பா சிறுபில்லை யாகத்தட்டி
　　நலமான கரகத்தில் வைத்துக்கொண்டு
தேட்டப்பா சிவயோகஞ் செய்யும்போது
　　திறமாகத் தணலிலொரு பில்லைவையே. (103)

---

கமலமுனிவர் ஞானசைதன்னியம் பதினெட்டில், சிவயோக சாதனையும் அதற்குரிய ஆதாரங்களும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது.

வைய்ப்பா தணலிலோர் பில்லைதன்னை
வைக்கயிலே புகைமண்டி மேலேசாடும்
மெய்யப்பா சொல்லுகிறேம் புகைவாசமேறில்
மேன்மையுள்ள லகிரியடா யென்னசொலவேன்
செய்யப்பா பில்லைதனை நெய்யிற்றோய்த்து
திறமான நெருப்பினிலே வைத்துக்காரு
பையப்பா வப்புகையி லுலேமைந்தா
பரமகயி லாசவொளி பார்க்கலாமோ. (104)

ஆமப்பா புகைதானு மெய்யிற்சாடி
யப்பனே சன்னிமுதல் வாதந்தீரும்
தாமப்பா பில்லிமுதல் சூனியங்கள்தீரும்
தருகாத குட்டமெல்லாந் தவறுண்டோபோம்
போமப்பா சலதோஷம் பொருமல்காந்தல்
பொல்லாத நெஞ்சடைப்புப் போகும்போகும்
நாமப்பா சொன்னபுகை யார்க்குஞ்சொன்னால்
நல்யோக மார்க்கமது நாடுந்தானே. (105)

நாடிப்பார் நிருவிகற்ப சமாதியாக
நன்மையுட நல்வழியே நடந்துக்கொண்டு
தேடிப்பார் சற்குருவை நன்றாய்த்தேடு
தேடியவர் வசனமதிற் றிறமாய்நின்று
கூடிப்பார் சுழிமுனையை நன்றாய்க்கூட்டிக்
குருவான பதிநோக்கி யமுர்தங்கொண்டால்
வாடிப்போந் தேகமது வாடாதையா
வரிசையுள்ள வுரிசையைநீ மறந்திடாதே (106)

மறந்திடா வுரிசையென்ன வென்றுகேட்டால்
மார்க்கமுடன் சொல்லுகிறேன் மகனேகேளு
சுறந்ததொரு கல்லுப்பு நீருப்புந்தான்
கண்டுகொண்டு கடிகைநிதங் கொண்டாயாகில்
இறந்திடா தேயிருக்குங் காயங்காய
மென்னசொல்வேன் மாயமென்று லேகாந்தத்தில்
மறந்திடா தக்கினியை யக்கினியிற்சேர்க்க
மாண்டவர்க ளில்லையடா வழலைச்சித்தே. (107)

---

காலாங்கிநாதர்பூஜாவிதி 80-ல், பூஜாவிதிகளும் கதிமோக்ஷத்திற்குரிய கற்பமுறைகள் அனந்தம் சொல்லப்பட்டிருக்கிறது.

சித்தான வழலையுட மார்க்கந்தன்னைச்
　　செவ்வையாய்ச் சொன்னனடா வாயிரத்தில்
முத்தான முப்பதிலுஞ் சொன்னேனந்த
　　மூர்க்கமுள்ள வயித்தியத்தில் முறையாய்ச்சொன்னோம்
பத்தாசை கொண்டபல திராட்டிற்றானும்
　　பக்குவங்கள் நன்றாகப் பதிவாய்ச்சொன்னோம்
வத்தாக பூரணத்தை மனதாய்க்கொண்டு
　　மார்க்கமுடன் சிவயோக மிருந்திட்டேனே. (108

கல்லுப்புச்சுண்ணம்.

இருந்திட்ட போதில்மனோன் மணிதான்வந்து
　　யேகாந்த வழலைமுறை நன்றாய்ச்சொன்னாள்
திருந்திட்ட வழலையென்றா லார்தான்காண்பார்
　　சிவாயகுரு வருளதினாற் செப்பக்கேளு
பொருந்திட்ட பூவழலை யண்டக்கூறு
　　பூரணமாய் நின்றதுவுங் கல்லுப்பாச்சு
கருந்திட்ட மானதொரு கல்லைவாங்கிக்
　　கருவான சுத்தசலந் தன்னிற்போடே. (109)

போட்டடுப்பில் வைத்துநீ யெரிக்கும்போது
　　புண்ணியனே நீர்வற்றி யுப்புத்தானும்
தாட்டிகமா யூறலற்றுக் கட்டிப்போச்சு
　　தயவான கல்லுப்பை வாங்கிமைந்தா
நாட்டியதோர் வெடியுப்புச் சீனம்ரெண்டு
　　நயமான கல்லுமே மூன்றுமொன்றாய்க்
கூட்டியே கல்வத்திற் பொடித்துக்கொண்டு
　　குருவான பழச்சாறு வதனிற்றாக்கே. (110)

தாக்கிநன்றா யறைத்துருட்டி வட்டுப்பண்ணிச்
　　சமத்தாக ரவிதனிலே காயப்போடு
தூக்கிநன்றாய்ச் சுண்டிடவே கணிரிட்டாக்கால்
　　சுகமாக மண்சீலை வலுவாய்ச்செய்து
(வாக்குமன தறுதியினாற் புடமைத்தைப்போடு
　　மைந்தனே புடமாறி யெடுத்துப்பாரு
நாக்குநுனி வெந்துவிடுஞ் சுண்ணவேகம்
　　நாதாந்தக் கல்லுப்புச் சுண்ணந்தானே. (111)

---

கமலமுனிவர் ஞான சூஸ்திரம் 76-ல், சுண்ணம் முதலிய விபரங்களும், வாசியோக வல்லபமும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது.

கண்ணத்தோந்தம்.

சுண்ணமதைத் தானெடுத்து வைத்துக்கொண்டு
சுருக்கான ரசமுடனே வங்கஞ்சேர்த்து
நன்னயமா யிதற்குநிகர் சுண்ணங்கூட்டி
நாட்டியதைக் கல்வத்திற் பழச்சார்விட்டு
தன்மையுடன் மெழுகுபோ லாட்டிப்பில்லை
தான்பிடித்து ரவிதனிலே காயப்போட்டு
உண்மையுட னோட்டில்வைத்து மண்சீலைசெய்து
வுத்தமனே புடம்போடச் சுண்ணமாச்சே. (112)

ஆச்சப்பா சுண்ணமதிற் சுண்ணஞ்சேர்த்து
அப்பனே வாய்நீரா லரைத்துக்கொண்டு
பாச்சப்பா துருசுதனக் கங்கிபூட்டிப்
பக்குவமாய்க் காயவைத்து வோடுமூடி
பூச்சப்பா மண்பூசிப் புடத்திற்போடு
பொருமிவந்து துருசதவுஞ் சுண்ணமாகும்
நீச்சப்பா வெகுநீச்சு துருசுசுண்ணம்
நிலைத்துதென்றால் வெகுகோடி வேதையாமே. (113)

ஆமப்பா துருசுநீ ரெடுத்துக்கொண்டு
அப்பனே நாஸிலொன்று வீரஞ்சேர்த்து
காமப்பா சொல்லுகிறோம் வாய்நீர்தன்னால்
நன்றாகத் தானரைத்து வழித்துக்கொண்டு
தாமப்பா தாரத்திற் கவகஞ்செய்து
சமத்தாக ரவிதனிலே காயப்போடு
ஓமப்பா மண்சீலை வலுவாய்ச்செய்து
வுத்தமனே புடம்போட நீறதாச்சே. (114)

லோவாதீநணம்.

நீறான தாளகநீ றதிகமப்பா
நீள்திசையில் வாதிகளோ வறியப்போறார்
பாறான நீறாலே யனந்தம்வேதை
பக்குவமாய்த் தானறிந்தோ னவனேவாதி
கூறாதே சிவயோக மிருக்குதென்று
குணமறியா நெஞ்சரிடங் கூறவேண்டாம்
பேராசை தான்பிடித்துப் பொய்யைப்பேசித்
பிலற்றி நூல் தனைக்கேழ் ப்பான் பேயன்தானே. (115)

---

டமரானந்தர் சிவநூல் சூஸ்திரம் 17-ல், முக்கியமான விஷயங்களை வெகு விபரமாகக் கூறப்பட்டிருக்கிறது. வாங்கிப்பாருங்கள்.

தானென்ற பேயர்கள்தான் மெத்தவுண்டு
 தானறிந்து அவர்களுடன் சேரவேண்டாம்
ஊனென்ற வறுதிதன்னை யறியான்மட்டை
 யொருசொல்லின் பயனறியா னுறுதிகாணுன்
தேனென்ற வமுர்தமதை யறிந்துகொள்ளான்
 சிற்றின்பக் கூற்றறியான் றெருவிலேதான்
வீணென்ற மரவிபோற் றிரிவான்சண்டி
 மேல்வரப்பு கீழ்வரப்பு அறியான்முனே. (116)

அறியாத லோபரைத்தா னடுக்கவேண்டா
 மவர்களிடம் நூல்முறைகள் பேசவேண்டாம்
விரிவான விலாசமதா யிருக்கும்போது
 வீண்பயல்கள் வந்துவுற வாடிக்கொண்டு
நெரியான பொருளேது பயன்களேது
 நிஷ்டைமுறை தனக்குறுதி யானதேது
பரியான மரியமைத்த வாறங்கேது
 பற்பவகைக் குறுதியென்ன பகரென்பாரே. (117)

பகரென்று கேழ்க்கின்ற பசாசரைத்தான்
 பக்குவமாய்த் தானகற்றி யறிவில்நில்லு
சிகரமென்ற தீபவொளி தன்னைப்பாரு
 சிவயோக நிஷ்டையிலே சென்றேநில்லு
அகரமென்ற தேகமதி லாருதார
 மடுத்துநின்ற நந்தியடா மூலாதாரம்
நிகரில்லா மவுனமடா பிர்மபீடம்
 நேர்மையுடன் பீடமதில் நேர்ந்துநில்லே. (118)

நேர்ந்துகொண்ட தாளகந்தி னீற்றைவாங்கி
 நேர்மையுடன் றிருசுநீ றொன்றாய்ச்சேர்த்துக்
கூர்ந்துநின்ற வெடியுப்புச் சுண்ணந்தன்னைக்
 கூட்டடா நாலிலொன்று வாய்நீர்தன்னால்
ஆர்ந்துநன்றாய்க் கல்வமதிற் குழப்பிக்கொண்டு
 அப்பனே யரைப்பொடியை ரெட்டிப்பிட்டுச்
சேர்ந்துநன்று யொன்றாகக் குழப்பிக்கொண்டு
 செவ்வையாய்க் குகைதனிலே யிட்டுமூடே. (119)

---

இச்சாஸ்திரத்தில் மறைப்பாயுள்ளவைகளைத் தெரியவேண்டுமானால் யோக ஞான சாஸ்திரத் திரட்டு இரண்டாம்பாகத்தைப் பார்க்கவும்.

திலர்தமை.

கண்டபடி யின்னமொரு கருமைக்கேளு
கருவான திலர்தமை யொன்றுசொல்வோம்
விண்டபடி யாரறிந்து செய்யப்போறார்
மேலான வேதாந்தி செய்வானப்பா
அண்டமெனுஞ் சருவெடுத்து வைத்துக்கொண்டு
அப்பனே யேரண்டத் தயிலத்தாலே
சுண்டிடவே குழைத்துநல்ல ரவியிற்போடு
தூசிசெத்தை விழுவாமற் சுகமாய்க்காரே. (136)

கார்த்துநன்றாய் ரவிதனிலே கிண்டிக்கிண்டி
சுனமாக நீர்வற்ற காயப்போட்டால்
பார்த்துநின்ற ரவியினுட வொளிதான்சென்று
பங்கயத்தின் மைதனிலே பற்றும்பாரு
சேர்த்துநின்ற மையொளியின் பெருமைதன்னைச்
செப்புகிறேன் மனோன்மணியின் றிறத்தால்மைந்தா
...கின்ற மையெடுத்துச் சிமிளில்வைத்து
சாதகமாய் மைக்குநிகர் புழுகுஞ்சேரே. (137)

சேரப்பா புழுகிட்டு மைவிளக்கிச்
செவ்வையாய்ச் சிவயோகத் திருக்கும்போது
நேரப்பா நின்றநிலை தவறுமற்றுன்
நேர்மையுடன் மையெடுத்துத் திலர்தம்போட்டு
காரப்பா வஞ்சனு தேவிபாதங்
கருத்துடனே மனதறிவாத் காத்தாயாகில்
ஊரப்பா வுள்ளபயி ருயிர்களெல்லா
முனதுவச மாகிவுனக் கடிமையாமே. (138)

ஆமப்பா யிடக்கரத்தில் மைப்பொட்டிட்டு
அசையாமற் கூர்ந்துமைமையை யன்பாய்ப்பார்த்தால்
போமப்பா வெகுதூரம் ஒளிதான்தோன்றும்
புதுமைவெகு அதிசயங்கள் கண்ணிற்காணும்
தாமப்பா கண்டதொரு வதிசெயத்தைத்
தாரணியில் விள்ளாதே தனதாயார்க்கும்
நாமப்பா கண்டபடி யின்னதென்று
நாட்டினால் நாய்போலே யலைவர்பாரே. (139)

---

கௌசிகமுனிவர் ஞான சூஸ்திரம் ௫0-ல், வஸ்து தெரிசனமும், சித்து விபரங்களும் கூறப்பட்டிருக்கிறது. வாங்கி வாசித்துணருங்கள்.

பாரப்பா வலக்காத்தில் மைப்பொட்டிட்டு
பதிவாகக் கீழ்த்திசையைப் பரிவாய்ப்பாரு
நேரப்பா வதுதாழ்ந்து தலைதான்றோன்று
நிதிகள்பல வதிசயங்கள் கிசமாய்க்காணுந்
தேரப்பா மனந்தேறி யகலநில்லு
சிவசிவா சிவயோகத் திறந்தானென்று
ஊரப்பா வறியாமல் மையையீயும்
வுண்மையுடன் பதனமதாய் வைத்துக்காரே. (14

காரடா மூலமதில் அங்கென்றோதிக்
கைம்முறையாய்ச் சத்திசிவ மொன்றாய்ச்சேர்த்து
சேரடா கம்பியுப்புப் பூரம்ரெண்டு
செவ்வையுடன் தூக்குநிகர் சேர்த்துக்கொண்டு
வாரடா கல்வமதில் நன்றாயாட்டி
வழித்துஒரு பிங்கானில் வளமாய்ச்சேர்த்து
கோரடா ரவிதனிலே காயப்போடு
நிசமான நந்தியென்ற வுப்பதாச்சே.

நந்தியுப்புக்குரு.

உப்பான நந்தியுப்புப் பலந்தானொன்று
ஒருமையுள்ள வரைப்பொடியும் பலந்தானொன்று
அப்பான பொடியதுவும் பலந்தானொன்று
அருமையுள்ள தாளகமும் பலந்தானொன்று
வைப்பான காசியிட கட்டிதானும்
மார்க்கமுடன் பலமறைதான் வளமாய்ச்சேர்த்துத்
தப்பாமல் நாகரச மொன்றாய்க்கூட்டித்
தண்மைபெற வொருபலந்தா னெடுத்துக்கொள்ளே. (142)

கொள்ளப்பா வாறுவகைச் சரக்கைநன்றாய்க்
குருபரனைத் தொழுதுமிகக் கல்வத்திட்டு
மெள்ளப்பா தான்பொடித்துப் பழச்சார்விட்டு
மேன்மைபெற மெழுகதுபோ லாட்டிமைந்தா
நள்ளப்பா வுருட்டியதை வட்டுபண்ணி
நலமாக வோடதனில் நடுவேவைத்து
செள்ளப்பா செப்பகலால் நன்றாய்மூடித்
தீர்க்கமுடன் கொழிமணலை யதின்மேற்கொட்டே. (143)

---

இதிற்கூறிய விஷயங்களனைத்தும் விபரமாய்த் தெரிய விரும்புவோர் குருராஜர் சிவயோக சிந்தாமணி 50-ல் பார்க்கவும்.

கொட்டுவது குருசொன்ன வலவாய்க்கொட்டி
கூர்மையுட னடுப்பேற்றித் தீயைமூட்டிக்
திட்டமுடன் தீயெரித்து வருகும்போது
சிவசிவா பதமென்ன வென்பாயாகில்
வட்டமுள்ள மணல்மேலே கருகிற்றானால்
மைந்தனே பதஞ்சரியென் றெடுத்துமெள்ள
சட்டமுட னாறவைப்பாய்க் குளிருமட்டுந்
தண்மையுடன் குளிர்ந்ததின்மேல் தயவாய்க்கேளே. (144)

கேளப்பா மணலைமெள்ள வாரிப்பின்பு
கிருபையுள்ள கிண்ணமதைத் திறந்துபாரு
ளப்பா வெரித்தநெற்றிக் கண்ணாலந்த
ான சரக்காறும் கட்டிபபோகும்
பா சொல்லாமல் வைத்துக்கொண்டு
குருவான திருவடியைத் தொழுதுபோற்றி
நாளப்பா குகைதனிலே செம்புருக்கி
வரிசையுட னதுக்குவரை மருந்துசேரே. (145)

செம்புசுத்தி.

சர்ப்பதுதான் செம்புருகி நிற்கும்போது
செவ்வையுடன் மருந்தெடுத்துச் சிருகவையா
கோர்ப்பதுபோற் கொஞ்சங்கொஞ்ச மாகச்சேர்த்துக்
குணமாகச் சரியாகச் சேர்த்துக்கிண்டி
வார்ப்பதுதான் பூமியிலே வார்த்தாயாகிற்
மகத்தான செம்பதுவுஞ் சுத்தியாச்சு
கார்ப்பதுதான் செம்புசுத்திப் பதனம்பண்ணிக்
கருவான வெள்ளியிலே பத்துக்கொன்றே. (146)

ஒன்றான வெள்ளியிலே பத்துக்கொன்று
வுருக்குமுகந் தன்னில்வீ கொடுத்துப்பாரு
நன்றான மாற்றதுவு மூவைந்தாகி
நாற்றமுள்ள செம்புதனி லேழரையுமாகுங்
குன்றாத தங்கமதிற் பத்துக்கொன்று
கொடுத்துருக்கித் தகடடித்துப் புடத்தைப்போடு
நின்றாடும் பரஞ்சோதி யானசோதி
நேர்மையுள்ள சோதியடா தங்கந்தானே. (147)

---

கடைப்பிள்ளை சிவயோக ஞானம் நூறில், வாசியோக நிலையும், வாத முறைகளும் வகையாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

லிங்கதூந.

தானென்ற தளவாயாகு சாதிலிங்கந்
　　தன்மையுட னதுவிபாகு சாற்றக்கேளு
தேனென்ற கல்வத்திற் பழச்சார்விட்டுத்
　　திறமாக வரைத்துநன்றாய் வட்டுப்பண்ணி
கோனென்ற குருபதத்தைப் போற்றிநன்றாய்
　　குவலயத்தில் துஷ்டர்களை யகலத்தள்ளி
மானென்ற மண்மறைவிற் புடத்தைப்போடு
　　மார்க்கமுடன் சரக்கைந்துங் கட்டிப்போமே. (148)

கட்டிநின்ற மருந்திடைக்குச் செம்புருக்கிக்
　　கைம்முறையாய் மருந்ததனைச் செய்துகொண்டு
திட்டமுடன் தண்ணீர்போ லுருக்கிச்சாய்த்து
　　செவ்வையுடன் செம்பதனை யெடுத்துப்பார்
சட்டமதாய்ச் செம்பதுவுங் கட்டிப்போகுந்
　　தன்மையுடன் வெள்ளிதனிற் பத்துக்கொன்று
இட்டமுடன் கொடுத்துருக்கி மாற்றைப்பாரு
　　என்னசொல்வேன் பதினாறு வயதுதானே.

தானான வேதைமுறை சொன்னமார்க்கந்
　　தன்மையுள்ள யோகத்துக் குறுதியாகும்
கோனான குருவருளால் சொன்னதல்லாற்
　　குறும்பான திருடனுக்கோ சொன்னேனையா
மானான மவுனமுள்ள சிவயோகிக்கு
　　மந்துரிமை யாகவென்று வாழ்த்தினேன்யான்
தேனான மதியமுர்தங் கொண்டுநல்ல
　　சிவயோக மார்க்கத்திற் சேர்ந்துநில்லே. (150)

நிஷ்டைமுறை.

நில்லென்ற நிலையறிந்து நிஷ்டைகூடி
　　நிஷ்களமாம் பிர்மத்தில் வாசிபூட்டிச்
சொல்லொன்றுந் தவறாமல் மதியைப்பார்த்துத்
　　துலங்குமதி ரவிதனிலே மதியைப்பார்த்துக்
கொல்லென்று ரவிதனிலே வுரிமையாகக்
　　கூறுபஞ்ச வக்கினியைக் கொளுத்திப்பாரு
சில்லென்று மதியமுர்தம் வாரிபாயுஞ்
　　சிவசிவா வந்தமுர்தங் கொண்டுதேறே. (151)

---

இராமரிஷி சிவயோக ஞானம் 18-ல், மறைப்பாயுள்ள ரகஷியங்களை வெளிப்படையாய்ச் சொல்லியிருக்கிறது. வாங்கிப்பாருங்கள்.

தேறுவதால் தேகவச்சிர காயமாகுஞ்
சித்தாதி சித்தனென்ற பேருமாகும்
கார்புருவக் கருணைவிழிக் கமலமீதிற்
கருவான பருதிமதிச் சுடருக்கப்பால்
பார்புனலாம் நெருப்பாறுக் கப்பால்நாதம்
மதிவான நாதமதைப் பார்க்கவேண்டிக்
கூரமுக மதிபெருகு நாதத்தோடே
கொண்டுசடம் நின்றநிலை கூர்ந்துபாரே. (152)

சந்திர சூரியன்

கூர்ந்துபார் சூரிேன சத்திசத்தி
கொழுகிநின்ற சந்திரனே சிவமதாகும்
தேர்ந்துபா ரிவர்களுட நிதானங்கேளு
சிவப்பான சூரியகலை பனிரெண்டாகும்
ஆர்ந்துபார் சந்திரகலை பதினாறுகும்
அதிகமுள்ள சந்திரனும் வாண்மைமிஞ்சிச்
சேர்ந்துசுடர் சத்திகலை பனிரெண்டோடே
சிவசிவா சிவகலையுஞ் சேர்ந்தவாறே. (153)

சேர்ந்துமிச்சம் நாலுகலை பூரணமாய்நின்று
செவ்வையுட நாவிலொன்று அம்பரத்தின்பதியாய்
நேர்ந்துமிகப் போனதின்பின் மூன்றுகலைதானும்
நெடுவானில் விந்துவென விளம்பிறையுமாகக்
கூர்ந்துபார் சத்திபிடங் திருவாசியாகிக்
கொழுகிநின்ற சதுர்தேதி யாகிப்பின்னும்
ஆர்ந்துநிறை வமாவாசைப் பருவமாகி
யந்தமென்று மிதுமூன்று மொன்றுய்ப்போச்சே. (154)

ஒன்றுகச் சதுர்த்தியிலே வளர்பிறையாய்நின்று
யுகமுடிந்து வளர்ந்துதடா பதினாறுகக்
கண்டாயோ மதிநிறைந்து குறைந்தசெய்தி
கருவாக வுனதிடத்தில் காட்டிவைப்போம்
பண்டான வகாரமடா விந்துவிந்து
பதிவான வுகாரமடா சத்திசத்தி
நின்றுடும் மகாரமடா சுழினைக்கம்பம்
நேர்மையுட னிதுமூன்றுந் தேகமாச்சே. (155)

அத்திரிமகாரிஷி உண்மை ஞான போதகம் 30-ல், ஒவ்வொரு விஷயங்களையும் வெகு தெளிவாய்ச் சொல்லியிருக்கிறுர். கண்டுணர்க.

தேகமென்றால் வெகுதூரம் நினைக்கவேண்டாம்
சேர்ந்துநின்ற வாதபித்தஞ் சிலேற்பமாகும்
ஆகமுட னதுமூன்று மிடைபின்னுக
வமர்ந்துநின்ற சுழிமுனையாய் நின்றவாறும்
பாகமென்ற சூரியன்றான் வாதமாச்சு
பதிவான சந்திரன்றான் பித்தமாச்சு
தாகமுடன் சேத்துமந்தான் சுழியாய்நின்று
சகலசெந்து மூன்றினால் மடிந்தவாறே. (156)

மடிந்தவகை யேதனவே யென்பாயாகில்
மக்களே யவனவன்செய் மார்க்கத்தாலே
முடிந்தவரை நன்மார்க்கம் விட்டகுறைமார்க்க
மூர்க்கமுள்ள துன்மார்க்கத் தாலேமைந்தா
கடிந்துநின்ற யிடையான பித்தமீறிக்
கபாலமென்ற சுழினையிலே சூடுதாக்கிச்
சொடுந்துவந்த வாசமதைத் துஞ்சப்பண்ணி
தொல்லுலகிற் பிறந்திறந்து போவார்காணே. (157)

பிறந்திறந்து போகாத நெறியைச்சொல்வேன்
பெருமைவிட்டு வுரிமையிலே பிலமாய்நின்று
கறந்துநின்ற வகாரமடா விந்துவிந்து
கருவான விந்துமடா மதியுமாச்சு
சிறந்துநின்ற மதியெல்லாம் உகாரமான
தேகமென்ற சூரியனிற் சேர்ந்துகொண்டு
மறந்துவிடா தேமகனே மகாரமான
மகத்தான பராபரத்தில் மகிழ்ந்துநில்லே. (158)

இராப்பகல்

நில்லென்ற நிலையறிந்து நிலையில்நின்று
நிலையில்லாச் சந்திரனை நிலையிற்சேரச்
சொல்லொன்றுந் தவறாத சொர்க்கமாகுஞ்
சோர்வான நாதமது யென்னவென்றால்
உல்லென்ற ரவிதானே சொர்க்கஞ்சொர்க்கம்
வூன்றிநின்ற சந்திரன்று னாதமாச்சு
செல்லென்ற ரவிமதிதா னேதோவென்றால்
சேர்ந்துநின்ற ராப்பகலாய் நின்றவாரே. (159)

---

இதிற்கண்ட விஷயங்களைப் புசுண்டா ஞானோபசிடதம் முப்பதைப்பார்த்தால் வெகு லேசுவாய்த் தெரிந்துகொள்ளலாம்.

வரானு ராப்பகல்தா னென்சொல்லென்றால்
மக்களே வெளிதோன்றச் சொல்வேன்கேளு
காரான ராவதுதான் சண்முடலப்பா
கருவான பகலதுதான பார்வைமைந்தா
கூறாக ரெண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு
குருவான பதிதலத்திற் கூட்டிமேலே
நேராக நின்றுதவ யோகஞ்செய்தால்
நிலையான சிவயோக மதுதான்பாரே. (160)

நாதவிந்து மெழுகு

பார்க்கையிலே மூலமதி லக்கினியுண்டாகப்
பதிவான கர்ப்பமொன்று சொல்லக்கேளு
சேர்க்கையுடன் அகாரமுடன் உகாரம்ரெண்டுஞ்
செவ்வையுடன் ரெண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு
ஆர்க்குமிது தெரியாமல் ரவியில்வைக்க
அப்பனே நாதவிந்து வொன்றாய்ச்சேர்த்து
மார்க்கமுள்ள மெழுகாகு மைந்தாமைந்தா
மனமகிழ்ந்து பணவிடைதான் மகிழ்ந்துகொள்ளே. (161)

கொள்ளையிலே சந்திரன்றான் தேய்ந்துதேய்ந்து
கூர்மையுடன் ரவிதானும் பிரகாசமாகி
சுள்ளையிலே யகப்பட்ட பாண்டம்போலே
சுகமான தத்துவங்கள் செந்தீப்பட்டுத்
தொல்லையென்ற சூழ்வினைக ளகன்றுபோகுந்
துருவமென்ற வத்துருவந் துலக்கமாகும்
பிள்ளையிலே வுங்களைப்போற் பிள்ளையுண்டோ
பின்னான ரவியினுட பிலத்தைப்பாரே. (162)

பிலமான காயாதி கர்ப்பங்கொண்டு
பேணிமெய்யில் விடத்தைப் பிலக்கப்பண்ணி
குலமான மூலமுத லாறாதாரங்
கூட்டிநின்ற நவக்கிரக மொன்பதிற்கும்
நிலமாக வநுக்கிரக மார்தான்காண்பார்
நீள்திசையில் சற்குருவைத் தேடிநின்று
நலமாக நாலஞ்சு வீட்டுக்கெல்லாம்
நடுவீடாய் நின்றவநுக் கிரகங்காணே. (163)

---

சூதமகாமுனி ஞான சூஸ்திரம் 14-ல், யோக சாதனமர்மங்களை
யும் ஆதாரமூல பிரணவ சொரூபங்களையும் சொல்லப்பட்டிருக்கிறது

தானென்ற வநுக்கிரகஞ் சுத்தப்பாழாய்த்
தவறாத பாழ்வீட்டை யென்னசொல்வேன்
கோனென்ற குருவருளால் வீட்டைநம்பிக்
கோடான கோடிசித்தர் தவமேசெய்தார்
ஏனென்று வவ்வீட்டிற் குறிதானென்று
பென்னவென்றால் தூண்டாத தீபந்தீபம்
வானென்ற வத்தீபம் பார்க்கவேண்டி
மகத்தான சத்திசிவ பூசைசெய்யே. (164)

பூசையென்ற சிவபூசை சத்திபூசை
புருஷமுடன் செய்வதற்கு யோகந்தங்கு
நேசமுட னப்பூசை மனதிலெண்ணி
நிச்சயமாய்க் குருவருளை சேர்த்துக்கொண்டு
ஆசையென்ற பலருசியை யகலத்தள்ளி
யருந்துருசி தனையறுத்த மருந்துவோர்க்கு
மாசியென்ற மயக்கமறு மனமேதங்கு
மகத்தான வாசியில்சென் றேறுவானே. (165)

ஏறுவான் வாசியிற்சென் றேறியந்த
யிருட்டான பதிகடந்து வெளியிற்சென்று
தேறுவான் மனந்தேறி யமுர்தங்கொண்டு
சிந்தைமன தொன்றாகித் தீபம்நோக்கிக்
கூறுவான் தூரதிஷ்டி நடத்தையெல்லாங்
குருவான பராபரத்தின் குறிப்பினாலே
ஆறுவான் நவக்கிரக மருளைப்பெற்று
அன்பான வநுக்கிரக மாதிதானே. (166)

ஆதியென்ற வநுக்கிரகம் பிர்மபீடம்
அப்பனே சுழிமுனையாய் நின்றபீடம்
சோதியென்ற சுடர்வடிவா யிருந்தபீடந்
துடர்ந்துநின்ற சிடனுக்குக் குருவானபீடம்
வாதியென்ற வந்தகிரி தீபபீடம்
மனோன்மணியாள் சென்றுவிளை யாடுபீடம்
கோதிலாச் சுத்தமய மானபீடங்
கூர்மையுள்ள பீடமடா நந்திதானே. (167)

---

புசுண்டர் மெஞ்ஞான விளக்கம் 80-ல், வாசியோக வல்லபங்களை யும், அதற்குரிய ஆறுதார ரவிபாகங்களையும் தெளிவாய்க்கூறியிருக்கிறது

நந்திவெளி கண்டவர்தான் ஞானயோகி
நலமான சிவயோகி பிர்மயோகி
அந்தமுள்ள வஷ்டாங்க மானயோகி
யருவுருவாய் நின்றதொரு பரமயோகி
பந்தமுள்ள வாசிநிலை யறிந்தயோகி
பதிவான காயாதி கர்ப்பயோகி
கெந்தருவ ரானகே சரத்தில்வாழுங்
கெவுனமென்ற கெவுனாதி யோகிதானே. (168)

தானென்ற யோகத்துக் குறுதியென்ன
தன்மையுள்ள வாசியென்ற மூலமூலங்
கோனென்ற குருவருளால் வாசிமூலக்
குறிப்பறிநது கொள்ளுவது மென்னவென்றால்
நானென்ற வாணவத்தை நலமாய்த்தள்ளி
நடுவான பூரணத்தைப் பற்றிக்கொண்டு
மானென்ற பிரணவத்துள் மனதைவைத்து
மகத்தான கேசரியைத் தொழுதுசில்லே. (169)

தொழுதமுறை யென்னவென்று லகாரதீட்சை
சுருக்கமுள்ள வுகாரமடா சத்திபூசை
பழுதொன்று நினையாம விரண்டுமொன்றாய்ப்
பக்குவமாய்த் தான்செபித்துப் பதியில்நின்று
நெளிதமுள்ள மனதுறுதி யாகிவந்த
ரேசகமும் பூரகமும் நேரேசெய்து
முனிதமர்க்குள் நிறுத்திக்கும் பத்தில்நின்று
முனையான தீபமதைத் தூண்டிப்பாரே. (170)

லிங்கத்தார தரு.

தூண்டிமிசப் பார்க்கையிலே சோதிகாணுந்
துவாதிசாந் தத்தில்மன துறுதியாகும்
தாண்டிமிகப் போகாம லறிவில்நின்றால்
சகலகலைக் கியானமெல்லாந் தானேதானாய்
வேண்டியதோர் கருமான மின்னமொன்று
வெகுதெளிவாய்ச் சொல்லுகிறேன் மெய்யதாக
பூண்டமன துறுதியினா லிங்கந்தாரம்
புகழான விந்துவுடன் கெந்திகூட்டே. (171)

மௌனச்சித்தர் பாடல் பன்னிரண்டில், யோக சாதன விபரங்களை வெகு தெளிவாய்த் தெரிந்துகொள்ளலாம். வாங்கிப்பாருங்கள்

பூட்டப்பா கெந்தியுடன் துருசுதானும்
பொருந்தவசு மோரிடையாய் நிறுத்துக்கொண்டு
காட்டப்பா வதற்கிடைதா னுதிசேர்த்து
நன்றான பழச்சாற்றால் கல்வத்தாட்டு
ஆட்டப்பா யீராறு சாமமாட்டி
அரகரா வழித்துருட்டி. வட்டுப்பண்ணி
மூட்டப்பா சட்டிதனில் வைத்துமூடி
மூடுவந்து மணற்கொட்டி யெரித்திடாயே. (172)

எரித்துமணல் கருகுமப்போ யிறக்கிவைத்து
இதமாக வாறினபின் திறந்துபாரு
குறித்தசாக்காறு மொன்றாய்க் கட்டிப்போகுங்
கருவாக மனந்தனிலே கூர்ந்துகொண்டு
வருத்தமிட்டுச் செம்புருக்கி யதற்குநேராய்
மார்க்கமுடன் மருந்தீவாய் கிண்டிக்கிண்டித்
திருத்தமுடன் மருந்தீய்ந்து நன்றாவூதிச்
செம்புகளிம் பானதுவுங் கட்டிப்போச்சே. (173)

கட்டிநின்ற செம்பதனைப் பதனம்பண்ணிக்
கருவாக விடைக்கிடையே தங்கஞ்சேர்த்து
திட்டமுடன் வெள்ளிதனிற் பத்துக்கொன்று
செவ்வையுடன் றானுருக்கி யெடுத்துப்பாரு
வட்டமிட்ட ரவியொளியை யென்னசொல்வேன்
மார்க்கமுட னவ்வொளியைக் கண்டுநீயுந்
துட்டருடன் கூடாமல் விண்ணைநோக்கித்
துவாதசாந் தத்தில்மனந் துலங்கிநில்லே. (174)

நில்லென்ற நிலையறிந்து மனதுபூண்டு
நிலையான மூலமுத லாறுதாரம்
உள்ளென்ற வுள்மூல மேலாதாரம்
ஒடுங்கிநின்ற தத்துவமாந் தொண்ணூற்றாறுந்
தள்ளந்தப் பதிதனிலே நிறுத்தியந்தத்
தள்ளாலே யாகுதியாய்ச் சாம்பலாக்கிக்
கொள்ளுகிற விதமென்ன வுத்தளமாய்ப்பூசிக்
குண்டலியி னந்தியொளி கூர்ந்துபாரே. (175)

---

மௌனச்சித்தர் ஞானம் எட்டில் சின்மயசொரூப மூலாட்சரங்களையும் மௌனதீட்சை விபரங்களையும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஞானம்.

பாரப்பா ரவிமதியு மொன்றாய்க்கூட்டிப்
பருவமுடன் புருவநடுப் பதிக்கப்பாலே
நேரப்பா வதனிலொரு கமலந்தோற்றும்
நின்றிலங்கும் கமலமதை நேரேபார்த்தால்
ஆரப்பா வறிவார்கள் ஞானதீபம்
அரகரா சிவயோக மானதீபம்
மேரப்பா மெய்ஞ்ஞான தீபந்தன்னை
மெய்யாகக் கண்டுசிவ யோகம்பாரே. (176)

பாரப்பா மனதுகொண்டு அறிவிற்சென்று
பரிவான மூலமடா மூலாதாரம்
நேரப்பா நின்றதொரு வாருதாரம்
நிலையான நடுமைய மேலாதாரம்
வீரப்பா கொண்டவரி தாரந்தாரம்
மெய்யான தாரமடா விஞ்சைவிஞ்சை
கூரப்பா குருவான விஞ்சைமூலங்
கூர்மையுட னம்மூலங் குறியாய்க்காணே. (177)

குறியாகக் கண்டந்தக் குறியில்நின்று
கூர்மையுள்ள தாரமதை யெடுத்துமைந்தா
சரியாகத் தானுருக்கிப் பாண்டத்திட்டுச்
சளியாத காடியதி லிட்டுநன்றாய்
நெறியான மஞ்சளொடு வுப்புநேராய்
நினைவாகத் தானூட்டி யதற்குட்சேர்த்து
தெரிவாகக் கிண்டிநன்றாய்ப் பிசறிக்கொண்டு
தீயெரித்து வடுப்பேற்றி யெரித்திடாயே. (178)

எரித்தபத மாவுகண்டா லிறக்கிமைந்தா
வின்பமுடன் குளிரவைத்து மறுநாள்தானும்
திருத்தமுடன் முன்போலே (பத்து) முறையே செய்தால்
சிவசிவா தாரமதிற் கசப்புநீங்கும்
வருத்தமென்று நினையாமல் ரவியிற்போட்டு
மார்க்கமுடன் தானுணர்ந்து சுக்கிலம்போல்
கருத்துடனே தானுணர்த்தி யெடுத்துநல்ல
கல்லுறலில் மாவாக யிடித்திடாயே. (179)

---

கடைப்பிள்ளை ஞானதீட்சாவிதிபதினாறில், பூரணதீட்சை, நந்தி தெரிசனம் யோகஞான விபரங்களையும் தெளிவாய்த்தெரியலாம்.

இடித்திடுவாய்ச் சமூலமதை பொடியதாக்கி
இன்பமுடன் முன்போலே பாண்டத்திட்டு
வடித்ததொரு மாவதற்கு வரைதான்பூர
மாட்டிநன்றா யொன்றாக்கி மைந்தாமைந்தா
தொடுத்ததொரு பாண்டமதை மூடிமைந்தா
சுகமாக மண்டலந்தான் சமாதிவைத்து
நடுத்தரமாய் மனதுறுதி யாகக்கொண்டு
நடுவான பூரணத்தைத் தொழுதிடாயே. (180)

தொழுதிடுவாய் முந்திமுந்திக் குருவைத்தானுந்
தொழுதபின்பு அகாரமென்ற சிவத்தைப்பூசிப்
பழுதொன்று நினையாமல் சத்திதன்னைப்
பாலகனே மனதுறுதி யாலேபூசி
தெளிதமுள்ள மனதாலே பூசைபண்ணி
நீமகனே குருபூசை நன்றாய்ச்செய்து
வழிதவரா தேயிருந்து சமாதிசென்று
மார்க்கமுட னக்கட்த்தை யெடுத்திடாயே. (181)

எடுத்ததொரு பாண்டமதை மைந்தாநீயும்
எகிமட்டு நாள்வரைக்கும் ரவியிற்போடு
தொடுத்ததொரு மேற்கவசந் தள்ளிநீயும்
சுகமாக வரிதாரக் கடுகைமைந்தா
விடுத்ததைநீ பிங்கான்றன் றாளிசேர்த்து
மெய்யாக வைத்ததைநீ பூசைபண்ணு
அடுத்ததொரு பூசையென்ன வென்றால்மைந்தா
வாதியென்ற நவகோண மிட்டுப்பாரே. (182)

பாரப்பா நவகோண மிட்டுக்கொண்டு
பரமான மேருவதை நடுவேவைத்து
காரப்பா சுகந்தமலர் பொற்பதத்தால்
கனிவாக வற்சனைகள் கருத்தாய்ச்செய்து
தேரப்பா வயிரவற்கு வடமாலைசாற்றிச்
சிவசிவா தீபமொடு தூபங்காட்டி
நேரப்பா நின்றபர மேருதன்னில்
நிலையான வமுதரசக் கடுகுவாங்கே. (183)

இச்சாஸ்திரத்திற்கூறிய இரகஷியங்களைத் தெளிவாய்த்தெரியவிரும்பினால் யோக ஞான சாஸ்திரத் திரட்டு 1, 2, 3, பாகத்தைப் பார்க்கவும்.

வாங்கிடுவாய் கடுகில்நல்ல கடுகுபோலே
மைந்தனே தானெடுத்து நாவுதன்னில்
பாங்குபெற வைத்ததின்மே லங்கென்றேதான்
பதிவாகக் கண்டமதி லங்கென்றானு
சாங்குமுட னமுதரசந் தானேபொங்குந்
தன்மையுடன் தான்புசித்துத் தனதாய்மைந்தா
ஆங்கதிகொண் டநுதினமும் வாசிநோக்கு
அருளான வாசியினாற் றீபநோக்கே. (184)

பூரணலேகியம்

நோக்குவதற் கின்னமொரு வுறுதிகேளு
நுண்மையுள்ள பூரணலே கியந்தான்மைந்தா
வாக்குமன துறுதியடா மசுத்தாம்போத
மனதுநெறி யறிவான வாமபோதம்
ஏர்க்கையுள்ள போதமதை யென்னசொல்வேன்
ஏகாந்த லேகியத்தி னியல்புகேளே
சேர்க்கையுள்ள செங்கமலத் தமுர்தம்வாங்கிச்
சிவசிவா பீங்கானிற் சேர்த்துக்கொளளே. (185)

சேர்த்தமொரு பூரணத்திற் பூரஞ்சேர்த்துச்
சிவசிவா மிடைசரியாய்ச் சேர்த்துமைந்தா
பார்த்திபனே ரெண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு
பதிவாக ரவிதனிலே வைத்துக்காரு
பூர்த்தமல ரமுதரசம் பூரம்ரெண்டும்
பொருந்திநன்றாய்க் கட்டியது புட்டுப்போலாம்
கார்த்திருந்து ரவிதனிலே நவநாள்போடு
காரணமா யந்திடைக்குப் பூரஞ்சேரே. (186)

பூரமதற் கிடைசரியாய்ச் சேர்த்துக்கொண்டு
புத்தியுடன் கல்வமதில் நன்றாயாட்டிக்
காரமென்ற லேகியத்தை யுருட்டிமைந்தா
கனமான பீங்கான்றன் மேருக்கேற்றி
வீரமென்ற பூரணமே யென்றுபோற்றி
விபரமென்ற நவகோணம் நடுவில்வைத்து
சாரமுடன் சற்குருவைத் தியானம்பண்ணிச்
சமரசமாய்க் கடுகளவு யெடுத்திடாயே. (187)

---

மச்சமுனிவர் ஞான தண்டகம் 97-ல், மை மெழுகு மூலிகை முதலிய விபரங்கள் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

எடுத்துநம்ப் பூரணத்தைத் தொழுதுமைந்தா
யிதமாக மண்டலமே கொண்டாயானால்
அடுத்தமனை யாறுமடா வலுத்துப்போகும்
அசைவான வாசியது வமர்ந்துநிற்கும்
தொடுத்ததொரு தேகமடா வச்சிரகாயஞ்
சுந்தரம்போல் மன்மதனைத் துலங்குவாய்நீ
நடுத்தரமாய்ப் பூரணத்தி லிருந்துகொண்டு
நாதாந்த சிவயோகம் நண்ணுவாயே. (188)

நண்ணுவது பூரணத்தை நம்பவேண்டும்
நாதாந்தப் பேரொளியை நாடவேண்டும்
உண்ணுவது சத்திசிவ பூசைவேண்டும்
ஒடுக்கமந்த நிலைதனிலே யுறுதிவேண்டும்
எண்ணுமந்தப் படியாக யிருக்கவேண்டும்
ஏகாந்தச் சிவயோக வியல்புவேண்டும்
விண்ணதனை மெய்யாக நம்பிக்கொண்டு
மேலான சிவயோகம் விரும்பிநில்லே. (189)

முப்பூச்சுண்ணம்

நில்லந்த நிலைதனிலே நிலைத்தால்மைந்தா
நீடூழி காலமடா நிலைக்குந்தேகம்
கல்லென்ற கல்லுதனைக் கருத்தாய்நீயும்
கருவான வுப்பதனை வாங்கிமைந்தா
உள்ளென்ற வக்கினியிற் சுத்திபண்ணி
ஓர்நிறையாய் வெடிசீனம் நன்றாய்ச்சேர்த்துச்
செல்லென்ற தன்னீரா லரைத்துமைந்தா
திறமாக வரைத்ததனை வட்டுப்பண்ணே. (190)

பண்ணியந்த வட்டதற்குக் கவசம்பண்ணிப்
பரிவாக ரவியிலிட்டுப் புடத்திற்போடு
தன்மையாய்ப் புடமாறி யெடுத்தபின்பு
தனதாக வஞ்சுமுறை முன்போற்செய்தால்
உன்னியதோர் காரமதை யென்னசொல்வேன்
வுகமையில்லாச் சுண்ணமடா வேகமெத்த
விண்ணிறைந்த சுண்ணமடா வேகமெத்த
வேதாந்த சிவயோகம் விளங்குந்தானே. (191)

---

இவ்விஷயங்களனைத்தும் தேரையர் நவலோக பற்பம் 16—ல், தெளிவறக் கூறியிருக்கிறது வாங்கி வாசித்துணருங்கள்.

தானான சுண்ணமதில் வேதைகோடி
 தயங்காத பற்பமடா கோடிகோடி
பூனான கட்டினமு முறுக்னங்கோடி
 பூரணமாய்ச் செயநீரின் புதுமைகோடி
கோனான குருமுறைகள் கோடாகோடி
 கூறுகிற கர்ப்பமுறை குணமோகோடி
ஊனான தேகமதிற் சுண்ணஞ்சேர்க்க
 ஒடுங்குகின்ற மாய்கையெல்லா மோடிப்போச்சே. (192)

போச்சென்று விடுசாதே காரச்சிப்பி
 புதுமையுடன் சொல்லுகிறேன் கும்பிடானே
நீச்சென்ற வோடதனை வாங்கிமைந்தா
 நிலையாத வழலைதனைச் சுத்திசெய்து
பேச்சொன்று மில்லாத பொன்கபுருவாங்கி
 பெருமையுள்ள சத்தியது கூடச்சேர்த்து
மூச்சென்ற தன்னீரால் கல்வத்தாட்டி
 மூர்க்கமுட னாட்டியபின் வட்டுப்பண்ணே. (193)

சத்த பற்பம்

பண்ணியந்த வட்டதனை யுலர்த்திமைந்தா
 பாலகனே மண்சீலைப் பதிவாய்ப்பண்ணி
சென்னிமையை நோக்கியந்தப் புடத்தில்வைத்துத்
 தீப்பிடித்து யெரிகின்ற பருவந்தன்னில்
தன்னிமையாய்க் கவசமதை யெடுத்துமுன்போல்
 தன்னீரால் றனாட்டி வட்டுச்செய்து
புண்ணியனே மண்சீலை தானுஞ்செய்து
 புத்தியாய் முன்போலே புடத்திற்போடே. (194)

போட்டபுட மாறியபின் னெடுத்துப்பாரு
 பூரணத்தின் கிருபையினால் வெளுத்துநீறும்
தாட்டிகமாய் நீறினதை வைத்துக்கொண்டு
 சமரசமா யந்திசந்தி யுள்ளேகொண்டால்
நாட்டியதோர் வாதபித்தஞ் சிலேற்பனத்தால்
 நாடிநின்ற வியாதிகளும் நசித்துப்போகும்
பூட்டியதோர் திரையகலும் புதுமைகாணும்
 பூரணமாய்ச் சிவயோகம் புனிதமாமே. (195)

---

சூரியானந்தர் ஞானசூஸ்திரம் பதிமூன்றில், இதிற்கூறிய விஷயங்களும் இன்னுமனே சாதன விஷயங்களும் கூறியிருக்கிறது.

புனிதமுள்ள சிவயோக மெடுத்துப்பார்த்துப்
பூரணமா யந்தறிவிற் புனிதமாகக்
கெனிதமுடன் மவுனமதி லுரைத்துமைந்தா
கேசரத்திற் கேசரியாம் பூரணத்தைநம்பி
தொனிதமுள்ள சிலம்பொலியைக் கண்டுநீயுந்
தூண்டாத மணிவிளக்கைத் தொழுதுபோற்றி
மணிநாத மனோன்மணியை மனதிற்கொண்டு
மார்க்கமுள்ள சத்திசிவ மகிமைகேளே. (196)

கேளப்பா சத்திசிவ மகிமைதன்னைக்
கிருபையுட னறிந்தவையார் வணங்கப்போறார்
காலப்பா தனையறியார் தலையைக்காணார்
காலுதலை வேறாகக் கருதுவான்பார்
மேலப்பா சத்தியென்ற ரூபந்தன்னை
மெய்யான வுயிர்சிவத்துக் குறுதிசெய்தால்
தாளப்பா திறந்தமூர்தங் கொள்ளலாகுஞ்
சத்திசிவ பூசையில்லான் மடையன்தானே. (197)

பத்தியம்

தானென்ற மடையரவர் வெகுபேருண்டு
தன்மையுடன் சத்திசிவ மறிந்திருந்தும்
நானென்ற வாணவத்தை நீக்கமாட்டார்
நலமான பூரணத்தை நம்பமாட்டார்
தேனென்ற காயாதி கர்ப்பங்கொள்ளார்
திருடரவர் வாய்மதங்கள் திறமாய்ப்பேசி
கோனென்ற குருவினுட மனதைக்கிண்டிக்
கூடழிந்து போவாரைக் குறித்துத்தள்ளே. (198)

தள்ளுவது பெண்ணொடு புளியுமாகா
தாம்பூல மீனிறைச்சி சற்றுமாகா
துள்ளுவது யானையுடன் கோபமாகா
துணையான தாரம்விட்டு மறுதாரமாகா
அல்லலென்ற வலைவாகா வாசையாகா
வானந்த மானதொரு வறிவில்நில்லு
சள்ளையென்ற சாகரத்தின் மூடரோடே
சற்றுறவு மாகாது தனித்துநில்லே. (199)

---

இச்சாஸ்திரத்தில் மறைப்பாய் கூறியிருக்கும் இரகஷியங்களை
யோகஞான சாஸ்திரத்திரட்டு 6ம் பாகத்தில் தெளிவாய்ச்சொல்லும்

தனித்திருந்து சத்திசிவ பூசைபண்ணுந்
தன்மையுடன் பாலமூர்தந் தானேகொள்ளுந
தொனித்திருந்த பூரணத்தைச் சுகமாய்ப்பூசிச்
சுகமாகச் சிவயோகத் துறையில்நில்லு
பணித்திருத்தா ளானகம லமூர்தங்கொண்டு
மயங்காத பூரணத்திற் றீபங்காணும்
அணித்திருந்த சிவயோகத் தண்டத்துச்சி
யம்பரமாஞ் சிதம்பரந்தி லடங்குமுத்தே. (200)

முத்தான சிவயோக மிருநூறுதன்னை
முறையான குருவெனவென் றெடுத்துப்பார்த்து
சித்தான சித்துவினை யாடுமைந்தா
சிவயோக மார்க்கமடா திறந்தான்மெத்த
பத்தாசை கொண்டுமன மவுனமாகப்
பதியாகச் சிவயோக மிருநூறும்பார்
வித்தான பிறவியது வற்றுப்போகும்
மேலான சிவயோகம் விளங்குமுற்றே. (201)

இராமதேவர் சிவயோகம்-உ௱.

முற்றிற்று.

## இராமதேவர் திருவாய்மலர்ந்தருளிய சாஸ்திரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| இராமதேவர் வைத்தியம் | 1000 | ஷியார் சரக்குவைப்பு | 50 |
| ஷியார் சாலம் | 800 | ஷியார் அஷ்டாங்கயோகம் | 50 |
| ஷியார் நிகண்டு | 500 | ஷியார் முப்பு சூஸ்திரம் | 31 |
| ஷியார் கருக்கடை | 500 | ஷியார் பரிபாஷைவிளக்கம் | 27 |
| ஷியார் குருநூல் | 300 | ஷியார் ஞானத்திரவு | 16 |
| ஷியார் சிவயோகம் | 200 | ஷியார் குருசூஸ்திரம் | 16 |
| ஷியார் தண்டக்கம் | 110 | ஷியார் பூஜாவிதி | 10 |
| ஷியார் தண்டக பட்சணி | 109 | ஷியார் ஞானம் | 10 |
| ஷியார் பரஞானகேசரி | 100 | ஷியார் ஞானம் | 5 |
| ஷியார் வைத்திய சூஸ்திரம் | 83 | ஷியார் வைத்தியம் | 6 |

இந்த சாஸ்திரங்களெல்லாம் ஓலையேட்டுப் பிரதிகளிலிருந்ததை தற்சமயம் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறது. வாங்கி வாசித்து உண்மையைத் தெரிந்துகொள்ளுங்கள்.

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோன்,

உ

குமரன்றுணை.

மகாமகத்துவம்பொருந்திய

# இராமதேவர்ரசாயனம் சூ.

தேவியெனு மனோன்மணியா மெந்தன்தாயார்
திருப்பாதம் போற்றிசெய்து தீரமாக
ஓவியம்போல் ரசாயனத்தை உனக்குத்தானும்
உத்தமனே சொல்லுகிறேன் உலகோர்க்காக
பாவிகட்குக் காட்டாதே வெளிவிடாதே
பச்சமுட னிம்முறைபோ லாருஞ்சொல்லார்
ஆவியொன்று கூடிரண்டா யிருந்ததாலே
அப்பனே யிம்முறையை யரைந்திட்டேனே. (1)

ஒன்றான ரசாயனத்தை யியம்பக்கேளு
ஓயோகோ வதின்பெருமை யென்னசொல்வேன்
நன்றான (பெரிய)திராட்சிப்பழம் பலந்தான்பத்து
கலமான (சிறு)திராட்சிப்பழம் பலந்தான்பத்து
குன்றான பாண்டத்திற் போட்டன்பாக
குவிப்பாக சுத்தசலம் நேர்நிறையாயூற்றி
கன்றான தனுபால்தான் குடித்ததன்மை
கனிரசத்தை யிரக்கிவிடக் களறுவேனே. (2)

களறுகிறேன் எரித்துமெள்ள இறக்கியாற்றிக்
கண்மணிபோல் பிசைந்துவடி கட்டியேதான்
தளராமல் முன்னிறைபோல் யெடுத்துவொன்றாய்
தழைக்கவே ரெண்டுமிகக் கலந்துகொண்டு
அளவதுநேர் குறையாமல் பாண்டத்திட்டு
அதிவிதயா யெரித்துவிடு பதமதாக
இளகியது பிசினியைப்போல் கம்பிபோலே
இசைந்தபதந் தனைக்கண்டு இணைக்கக்கேளே. (3)

கேளப்பா சதகுப்பை சீரகமுமேலம்
கெடியான திரிகடுகு லவங்கப்பட்டை
வாளப்பா நன்னாரிவேர் முத்தக்காசு
வகையான சித்தரத்தை சாதிப்பத்திரி
நீளப்பா அத்திதிப்பிலித் தேவதாரம்
நிறைந்ததொரு சந்தனமு மாஞ்சிமேலம்
தேளப்பா யிம்மருந்துப் பிணியைத்தீர்க்க
தென்புடனே தானெடுப்பீர் பலமொன்றாமே. (4)

பலமதென்ற முறைப்படியே தவறிடாமல்
பக்குவமாய் வருத்திடித்து வடிதான்கட்டி
நலமதென்ற பொடியதனைப் பாகிற்கூட்டி
நயன்றிடவே ரசாயனமாய்ச் சேர்த்துக்கொண்டு
பெலப்படுத்தி யிரக்கியபின் ஆரவைத்துப்
பெருமையுடன் பீங்கானிற் பதனம்பண்ணி
சிலப்படுத்திச் சேர்ந்தகனல் மேகத்துக்குச்
சீர்பெறவே கொடுத்திடவே தீருந்தானே. (5)

தீருகிற வியாதிதனைச் செப்பக்கேளு
திணைவுவனல் கைகாலி ஞேச்சல்மெத்த
சோருகிற வாய்வுபித்த அஸ்திவெட்டை
சொரிவிரணங் கண்ணெரிச்சல் வயிற்றின்காந்தல்
மாறுகிற புத்திவன்னத் திரேட்சமெல்லாம்
மனோன்மணியின் கிருபையினால் மகலுமப்பா
ஏறுகிற விதம்பார்த்து யேறிநின்றால்
எத்தொழிலுங் கைக்கூடி யிசையுந்தானே. (6)

உத்த வாக்கிய மெய்யாது வாகுமாம்
மெத்த வர்க்கிது மிக்கன புத்தியாம்
சுத்த வாக்கியம் சொற்பிழை யற்றது
மத்த வாக்கிய மாக்கிடா தென்றதே.

இராமதேவர் ரசாயனம் சூ

முற்றிற்று.

# வைத்தியப் புஸ்தகங்களின் விளம்பரம்.

அடியிற்கண்ட புஸ்தகங்களெல்லாஞ் சுத்தப்பிரதியாய் ஓலையேட்டுச் சுவடிகளை வைத்துப் பரிசோதித்துத் திக்குக் கடிதத்தில சுத்தப் பிரதியாய் அச்சிட்டிருக்கிறது. வாங்கி வாசித்துணருங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ராமதேவர் சிவயோகம் 200 | 0 | 5 | 0 |
| பிர்மமுனிவைத்தியம் 380 | 0 | 7 | 0 |
| கொங்கணர் கடைக்காண்டம் 500 | 0 | 8 | 0 |
| கருவூரார் பலதிரட்டு 300 | 0 | 6 | 0 |
| சட்டைமுனிவர் ஞானம் 200 | 0 | 5 | 0 |
| தன்வந்திரி கருக்கடை 300 | 0 | 4 | 0 |
| போகர் வைத்தியம் 700 | 0 | 10 | 0 |
| புலிப்பாணி வைத்தியம் 500 | 0 | 8 | 0 |
| சுப்பிரமணியர் ஞானம் 500 | 0 | 8 | 0 |
| நந்தி கருக்கடை 300 | 0 | 5 | 0 |
| உரோமரிஷி வைத்தியம் 500 | 0 | 8 | 0 |
| திருமூலர் வைத்தியம் 600 | 0 | 8 | 0 |
| தேரையர் வைத்தியம் 1001 | 0 | 12 | 0 |
| மச்சமுனி சரக்குவைப்பு 800 | 0 | 8 | 0 |
| தெட்சணாமூர்த்திஜாலம் 500 | 0 | 8 | 0 |
| வசிஷ்டர் வைத்தியம் 205-ம் இன்னும்சிலசாஸ்திரங்களும் சேர்ந்தது | 1 | 0 | 0 |
| யூகிமுனிவைத்தியம் 800 | 0 | 8 | 0 |
| சுந்தரானந்தர் வைத்தியக் கோர்வை | 1 | 0 | 0 |
| கடைப்பிள்ளை வைத்தியக் கோர்வை | 1 | 0 | 0 |
| காலாங்கிநாதர் வைத்தியக் கோர்வை | 1 | 0 | 0 |
| புசுண்டர் வைத்தியக்கோர்வ | 1 | 0 | 0 |
| கோரக்கர்வைத்தியக்கோர்வ | 1 | 0 | 0 |
| அகஸ்தியர் செந்தூரம் 300 | 0 | 7 | 0 |
| ஷை வைத்தியபூரணம் 205 | 0 | 5 | 0 |
| ஷை பூரண சூஸ்திரம் 216 | 0 | 6 | 0 |
| ஷை பரிபூரணம் 400 | 0 | 7 | 0 |
| ஷை வைத்திய ரத்தினச் சுருக்கம் 365 | 0 | 6 | 0 |
| போகர் நிகண்டு 1200 | 1 | 0 | 0 |
| ஷை பலதிரட்டுவைத்யம் 710 | 0 | 10 | 0 |
| ஷை வைத்தியம் 1000 | 0 | 12 | 0 |
| இராமதேவர்வைத்யம் 1000 | 0 | 12 | 0 |
| ஷை கருக்கடை 500 | 0 | 10 | 0 |
| தன்வந்திரி நிகண்டு 300 | 0 | 6 | 0 |
| ஷை தயிலம் 500 | 0 | 6 | 0 |
| ஷை கலைக்கியானம் 500 | 0 | 8 | 0 |
| அகஸ்தியர் பூசாவிதி 200 | 0 | 4 | 0 |
| ஷை பஞ்சகாவியநிகண்டு 800 | 0 | 12 | 0 |
| ஷை பரிபூரணம் 1200 | 1 | 0 | 0 |
| சுப்பிரமணியர் 200 | 0 | 4 | 0 |
| அகஸ்தியர் முப்பு 600 | 0 | 10 | 0 |
| ஷை கர்மசூஸ்திரம் 350 | 0 | 7 | 0 |
| ஷை பச்சிலை நிகண்டு | 1 | 0 | 0 |
| பிர்மமுனி வைத்தியம் 750 | 0 | 10 | 0 |
| ஷை வைத்தியம் 250 | 0 | 6 | 0 |
| நந்தி நிகண்டு 300 | 0 | 5 | 0 |
| மச்சமுனி வகாரம் 800 | 0 | 12 | 0 |
| ஷை பெருநூல் 800 | 0 | 12 | 0 |
| யாகோபு வைத்தியம் 740 | 0 | 12 | 0 |
| ஷை சுண்ணம் 300 | 0 | 6 | 0 |
| ஷை செந்தூரம் 300 | 0 | 6 | 0 |
| உரோமரிஷி வகாரம் 500 | 0 | 10 | 0 |
| யூகிமுனி வகாரம் 1000 | 1 | 0 | 0 |
| அகஸ்தியர்கௌமதிநூல் 420 | 0 | 8 | 0 |
| ,, ஞானசவுமியசாகரம் 1200 | 1 | 0 | 0 |
| பச்சிலை மருந்துகளின் பரிபாஷை அகராதி 1, மூலிகை அகராதி 2, அரும்பெயர் அநுபந்த அகராதி 3, வைத்தியத்தொகையகராதி 4, பச்சிலையகராதி 5, பச்சிலை தனிக்குண அகராதி 6, இந்த ஆறு அகராதியும் ஒன்று சேர்ந்த பெரிய அகராதி | 1 | 8 | 0 |

பதினெண் சித்தர்களாகிய
தேவ ரிஷி முனி சித்தர்கள் அருளிய
வைத்திய வாத
யோக ஞான சாஸ்திரத் திரட்டு
இது 12 பாகங்களாக அச்சிட்டிருக்கிறது. வாங்கிப்பாருங்கள்
பாகம் 1-க்கு விலை ரூ. 1 4 0

இ. ராம. குருசாமிக்கோன்,
புத்தகஷாப், புதுமண்டபம் மதுரை.